# அரசு ஊழியர்

**2021 டிசம்பர் மலர்:42 இதழ்:12**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

**அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு**

**ஆசிரியர் : ஆ.செல்வம்**

**ஆசிரியர் குழு:**

**மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி**

**இதழ் வடிவமைப்பு:**

**ஆர்.காளத்தி** *9677003178*

*ஆண்டுச் சந்தா : ரூ.100*

*தனி இதழ் : ரூ.10*

**முகவரி:** *பழைய எண். 48*
*புதிய எண் 46, தேரடித் தெரு*
*திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.*
e-mail : arasuoozhiyar@gmail.com

**அச்சகம்:** *சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை-600002*


## சூடா ஒரு கோப்பை சூப்

**நீங்கள் எந்த நிலத்தின் எலும்புகள்?**

போர்கள் நடந்து முடிந்த நிலத்தில்,
மண்புழு ஒன்று எல்லைக்கோட்டைக்
கடந்துகொண்டிருக்கிறது.

உயிருள்ளவனுக்கும்
புதைக்கப்பட்டிருப்பவனுக்கும் இடையில்
வளர்ந்துவரும் செடியொன்று தன் இலைகளை
முள்வேலிகள் தாண்டி உதிர்க்கிறது.

நீங்கள் எந்தத் தேசத்தின் மண்புழு?
நீங்கள் எந்தப் பிரதேசத்தின் உதிர்ந்த இலை?
நீங்கள் எந்த நிலத்தின்
புதைக்கப்பட்ட எலும்புகள்?

*- ஜீவன் பென்னி*

தலைவர் மடல்

# எங்களிடம் உள்ள ஒரே ஆயுதம் போராட்டம் மட்டுமே! எங்களிடம் உள்ள ஒரே கவசம் பொறுமை மட்டுமே!

டிசம்பர் மாதத்தில் நடைபெறும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற மாபெரும் இயக்கத்தின் 14ஆம் மாநில மாநாடு தமிழகத்தில் உள்ள அனைத்து அரசுத்துறை மற்றும் அரசு சார்ந்த பணிகளில் உள்ள பெரும்பான்மை ஊழியர்களிடையே ஆர்வம் கலந்த எதிர்பார்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக புறக்கணிக்கப்பட்ட, பறிக்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட உரிமைகளும், சலுகைகளில் எல்லாம் கிடைக்காவிட்டாலும் ஏதாவது திரும்பக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் இந்த மாநாட்டின் மீது விழ ஆரம்பித்திருக்கிறது. ஆனாலும் “அரசாங்கம் அதன் ஊழியர்களை சுமையாக கருத ஆரம்பித்துவிட்ட நிலையில் எத்தனை மாநாடுகள் நடத்தி என்ன பயன்?, அரசு ஊழியர்கள் மீதான அவமதிப்புகளும், உரிமை பறிப்புகளும் தொடரத்தான் செய்யும்.’’ என்று சில அங்கலாப்புகளும் அங்கொன்றும் இங்கொன்றுமாக கேட்கத்தான் செய்கிறது.

நாம் வரலாற்றை துல்லியமாக படிக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய சில போராட்டங்கள் பலவீனமடைந்து குறிப்பிட்ட எல்லையை தாக்க முடியாமல் போன பல தருணங்கள் நமக்கு ஆபத்து நம்முடைய வேலைக்கு ஆபத்து என்று கைவிட்ட நிலை கிடையாது. நம்முடைய போராட்டங்களை தள்ளிப்போட்டதற்கோ, நிறுத்தி வைத்ததற்கோ மக்களும் மக்களுக்கான சேவைகளும் பாதிக்கப்படக்கூடாது என்ற சமுதாய அக்கறை மட்டும்தான் காரணம். அரசாங்கத்தின் ஊழியர்களாக இருக்கும் நாம் அரசாங்கம் நம்முடைய உரிமைகளையும் சலுகைகளையும் பறித்து விட்டது என்பதற்காக மக்களுக்கான பணியை நிறுத்திவிட முடியாது என்பதால்தான் ஒருபுறம் மக்களுக்கான பணியை செய்து

கொண்டே மறுபுறம் நம்முடைய உரிமைகளை நிலை நிறுத்தும் போராட்டகளத்தில் நாம் தான் நின்றுகொண்டிருக்கிறோம்.

உண்மையில் சொல்லப்போனால் நாம் நம்முடைய உரிமைகளுக்காக இடைவிடாத போராட்டங்கள் நடத்திக் கொண்டேதான் இருக்கிறோம். ஆனாலும் நாம் நினைத்த வெற்றி இலக்கை இன்னும் எட்ட முடியவில்லை. அதன்பொருள் நாம் தோற்றுவிட்டோம் என்பதல்ல, நம்முடைய பொறுமையும், சகிப்புத் தன்மையும் சோதிக்கப்படுகிறது என்பதுதான் யதார்த்தம். அமைச்சர்களைப் போலவோ அதிகார வர்க்கத்தைப் போலவோ மக்களைப் பற்றி கவலைப்படாமல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்கிற தொனியில் நாம் நம்முடைய போராட்டங்களை வடிவமைத்ததாக வரலாறில்லை. நம்மை ஆள்பவர்களுக்கு இல்லாத சமூகப்பொறுப்பும், அக்கறையும் நமக்கு உண்டு என்பதை நீதிமன்றங்களிலும் மக்கள் மன்றங்களிலும் நாம் பலநேரங்களில் நிரூபித்திருக்கிறோம். அரசு ஊழியர்கள் என்கிற வரையறை சமூகத்தில் மலினப்படுத்தப்பட்டு வருவதும் நாம் தேர்ந்தெடுத்தவர்களே அதற்கு காரணமாக இருப்பதும் மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தும் செயல்கள். இந்த செயல்கள் ஆட்சிக்கு வரும் எல்லா கட்சி அரசியல்வாதிகளாலும் நிகழ்த்தப்படுவது சமகால அரசியலாகிவிட்டது.

எதிர்கட்சியாக இருக்கும் போது நியாயமாக தெரிந்த நம்முடைய கோரிக்கைகள் எல்லாம் ஆட்சிக்கு வந்த பின்னர் அடாவடியாக சித்தரிக்கப்படும் போக்கு தொடர்கதையாகிவிட்டது. புறாக்கள் தானியங்களுக்காக அலைந்துகொண்டிருக்கும் போது புலிகள் மான்கறி கேட்கலாமா என்கிற ரீதியில் அரசு ஊழியர்களை அவமானப்படுத்திய அமைச்சர் பெருமக்களை நேற்றும் பார்த்தோம் இன்றும் பார்க்கிறோம். இந்த அவமதிப்புகள் இன்று நேற்றல்ல 2003ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டுவிட்டது.

2003ஆம் ஆண்டு பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தினை இந்திய அரசாங்கம் முதன்முறையாக அறிவித்த தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாகவே தமிழகத்தில் அமல்படுத்திய அரசாங்கத்தை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்னும் முடிந்தபாடில்லை. அதன்பிறகு ஊதிய மாற்றம் என்ற பெயரில் ஊதிய முரண்பாடுகளை ஏற்படுத்தி அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் அல்லோகலப்படுத்திய அரசாங்கத்தை எதிர்த்து போராட வேண்டியிருந்தது. 2006ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட வேண்டிய ஊதிய மாற்றம் காலதாமதமான போது அப்போதும் போராட்டம் நடத்தித்தான் நாம் அதனைப் பெற முடிந்தது. அதில் இருந்த ஊதிய முரண்பாடுகளைக் களைய பல கவன ஈர்ப்புகள், பிரிதிநிதித்துவங்கள், பல மனுக்கள், வேண்டுகோள் கடிதங்கள் என அரசு ஊழியர்கள், மக்கள் பணிகளுக்கு பாதிப்பில்லாத வகையில் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் கண்திறந்து பார்க்கவோ, காது கொடுத்துக் கேட்கவோ முன்வரவில்லை. அதன்பிறகே அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஒன்றுபட்ட சக்தியாக திரண்டு அழுத்தம் கொடுத்து குறை தீர்க்கும் கமிட்டி ஒருநபர் கமிட்டி என பல கமிட்டிகள் அமைக்கப்பட்டன. அமைக்கப்பட்ட கமிட்டிகள் அனைத்தும் காலத்தை ஏப்பம் விட அமைக்கப்பட்டவை என்பது முன்கூட்டியே தெரிந்திருந்தும் நாம் நம்பிக்கையை கைவிடாமல் நம்முடைய உரிமைகளை எழுப்பிக் கொண்டேயிருந்தோம். குறை தீர்க்கும் குழு வெளியிட்ட அறிக்கையும் குறைகளைப் போக்காமல் ஏற்கெனவே இருந்த முரண்பாடுகளை இன்னும் அதிகப்படுத்தியது. இதன் தொடர்ச்சிதான், இப்போது "ஏழைகள் எல்லாம் அடுத்த வேளை உணவிற்காக வாடுகிறார்கள், ஆனால் அரசு ஊழியர்களோ அதிக சம்பளம் கேட்டு போராடுகிறார்கள்" என்று மக்களிடம் அரசு ஊழியர்களை அரக்கர்களாக சித்தரிக்கும் போக்கை அமைச்சர்கள் வெளிப்படையாக பேச வைத்திருக்கிறது.

உண்மைத் தகவல்களைப் பெறுவதற்கு எல்லையற்ற வழிமுறைகள் இருக்கும் இந்த டிஜிட்டல் யுகத்திலும்கூட, கோட்பாடுகள்

தவறாக புரிந்துகொள்ளப்படுவதற்கும், திரித்துக் கூறப்படுவதற்கும் எந்தவித வரம்புகளும் இல்லாமலிருப்பது வரலாற்றின் விசித்திர வேடிக்கைகளில் ஒன்றாகும். ஆனாலும் அதை ஒரு அரசாங்கமே முன்னின்று நடத்துவது கொடுமையின் கொடூரமாகும்.

"உன்னையே நீ அறிவாய்'' என்று ஏதென்ஸ் நகரத்து இளைஞர் சமூகத்தைச் சிந்திக்கத் தூண்டிய சாக்ரடீஸுக்குக் கிடைத்தது 'சமூக விரோதி' பட்டமும், விஷம் குடித்து உயிரைத் தீர்த்துக் கொள்ளும் தீர்ப்பும். உரிமை கேட்பு போராட்டத்தை முதலில் கையிலெடுத்த ஏசுவுக்குக் கிடைத்ததோ 'கலகக்காரன்' பட்டம். ''சீசருக்குரியதை சீசருக்குக் கொடுங்கள்'' என்று அவர் கூறியபோது அவர் பார்வையின் தீட்சண்யத்தை நேரடியாக எதிர்கொள்ள இயலாத யூதகுருமார்கள், மக்கட்கூட்டத்தை ஏவி 'இவனைச் சிலுவையில் அறையுங்கள்' என்று கூக்குரலிட வைத்தனர். ''உலகம் உருண்டையானது'' என்ற கலிலியோவை ஒரு சமூகம் கல்லால் அடித்தே கொன்றது. பேராலயத்தில் காற்றில் அசைந்து கொண்டிருந்த அலங்கார விளக்கினை உற்று நோக்கி தனி ஊசல் தத்துவம் தந்தவரும் வானமண்டலத்தைக் கூர்ந்தறிய தொலைநோக்கியைக் காட்டியவரும் அவரே. ''கண்டுகொண்டேன், கண்டுகொண்டேன்'' என்று தண்ணீர் தொட்டியிலிருந்து இறங்கி நிர்வாணமாய் தெருவீதியில் ஓடிய ஆர்க்கிமிடிஸை தடுத்து நிறுத்திக் கேட்டவர்களிடம் நான் என்னுடைய எடையை கண்டுபிடித்து விட்டேன் என்று புளங்காகிதத்துடன் கூறியபோது இவன் ஒரு 'அரைப்பைத்தியம்' என்றது சுற்றிநின்று சிரித்தது ஒரு கூட்டம். அரியணையில் அமர்ந்தபோதும் சுடுகாட்டில் வாழ்ந்தபோதும் நிலைபிறழாத அரிச்சந்திரனை 'வாழத் தெரியாதவன்' என்று எள்ளி நகைத்தது இந்த மண்ணில் நடந்த சம்பவம்தான். ''மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனி உண்டோ?'' என பாரதி விடுத்த 'புதியதோர் உலகம் செய்வோம்' அறைகூவல் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் ஆணிவேரை உலுக்கிய போது ''பைத்தியக்காரன்'' என கல்லெறிந்து விரட்டியது அச்சமூகம். உலகம் அதைக்கண்டு நகைத்தது. காலம்காலமாய் போராடி வென்றெடுத்த உரிமைகளை, தங்களுக்கு சட்டப்படி கிடைக்க வேண்டிய சலுகைகளை, மத்திய அரசு ஊழியர்கள், ஐஏஎஸ், ஐபிஎஸ், நீதிபதிகள் என உயர்தரப்பினருக்கு மட்டும் தொடரப்பட்டுள்ள உரிமைகளை கேட்கும் அரசு ஊழியர்களும் இந்த வரிசையில் ஆட்சியாளர்களாலும் அதிகார வர்க்கத்தினராலும் கிழித்து தொங்கவிடப்பட்டுள்ளனர்.

இத்தனை இழப்புகளையும் அவமானங்களையும் தாங்கிக் கொண்டிருக்கும் அரசு ஊழியர்கள் தங்களுக்கான பொறுப்பை உணர்ந்தும் நிராயுதபாணிகளாக நிற்கின்றனர். அவர்களிடம் உள்ள ஒரே ஆயுதம் போராட்டம், ஒரே கவசம் பொறுமை மட்டும்தான். அரசு ஊழியர்களின் போராட்டத்தின் உறுதிப்பாடும், வீரியமும் தான் அவர்கள் கையில் ஏந்தியிருப்பது எந்த ஆயுதம் என்பதை உலகுக்கும், எதிரே நிற்பவர்களுக்கும் எடுத்துக் காட்டுகிறது. போராட்டத்தின் உக்கிரம் சாட்டையாக, கத்தியாக, சுத்தியாக, துப்பாக்கியாக சில நேரங்களில் தூக்குமேடையாகவும் மாறி உரிமைகளை தடுப்பவர்களையும் மறிப்பவர்களையும் தண்டித்து விடுகிறது. 1988, 2003, 2017 போராட்டங்கள் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உக்கிரத்தையும் உறுதிப்பாட்டையும் உலகுக்கு எடுத்துக்காட்டிய போராட்டங்கள்.

அரசு ஊழியர்கள் நடத்தும் போராட்டங்கள் அடிப்படை உரிமைகளுக்கானது என்ற புரிதல் இருட்டடிப்பு செய்யப்பட்டு மக்களிடத்தில் அது அரசு ஊழியர்கள் சம்பள உயர்வு கேட்டு போராடுகிறார்கள் என்பதாக திட்டமிட்டு பிரச்சாரப்படுத்தப்பட்டு தொடர்ந்து திசை திருப்பப்பட்டு வருகிறது. பறிக்கப்பட்ட உரிமைகளுக்காக அரசு ஊழியர்கள் போராடிக்கொண்டிருக்கும் நிலையில் அரசாங்கமோ கார்ப்பரேட்டுகளுடன் கைகோர்த்துக் கொண்டு அரசுத்துறைகளையும் முற்றாக ஒழித்துக்கட்டும் வேலையில் இறங்கியுள்ளது. மக்கள் நலனுக்காக செயல்படும் அரசு அதன் ஊழியர்களை மக்கள் நலனுக்கான பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமானால் அந்த ஊழியர்களின் அடிப்படை உரிமைகளின் மீது ஓரளவேனும் அக்கறை செலுத்தவேண்டும்

என்று நீதிமன்றங்களும், சமூக ஆர்வலர்களும் தொடர்ந்து கூறி வருவதை எந்த அரசாங்கமும் ஏற்றுக்கொள்வதாக இல்லை. அரசுத்துறைகளையும் தனியார்மயமாக்கும் முயற்சிகள் என்பது மக்கள்நலனுக்கும் ஏழை எளிய மக்களின் எதிர்காலத்திற்கும் சாவுமணி அடிக்கும் போக்காகும். இதை நாம் இப்போது எதிர்க்காமல் விட்டுவிட்டால் பிற்காலத்தில் அரசு ஊழியர்கள் அத்துக்கூலிகளாகவும், ஆசிரியர்கள் அன்றாடங்காய்ச்சிகளாகவும், பொதுமக்கள் அடிமைகளாகவும் வாழும் நிலை ஏற்பட்டுவிடும். அரசாங்கம் என்ற அதிகாரமையத்தோடு நேர்மையான உரிமைகளுக்காக நம்பிக்கையுடன் ஒன்றுபட்ட சக்தியாக எதிர்த்து நின்றால் மட்டுமே அநீதிகளையும் அடக்குமுறைகளையும் தூள்தூளாக்க முடியும். உரிமை மீட்பு என்று வந்துவிட்டால் போராட்டக்களமும் போர்க்களமும் வேறு வேறல்ல என்ற சித்தாந்தத்தை தாங்கிப் பிடிக்க வேண்டும். எந்த உரிமையும் போராடாமல் கிடைத்ததல்ல. நாம் பறிகொடுத்துள்ள உரிமைகளும் இன்றுவரை அனுபவித்து வரும் உரிமைகளும் அரசுகளால் வாரி வழங்கப்பட்டவை அல்ல, அவை நம் முன்னோடித் தோழர்களால் கண்ணீரும் உதிரமும் சிந்தி பெற்றுத்தரப்பட்ட உரிமைகளாகும். நம்முடைய மாபெரும் பொறுப்பே எதிர்காலத் தலைமுறையினர் பெருமையோடு சொல்லிக்கொள்கிற அடிச்சுவடு ஒன்றை விட்டுச் செல்வதே ஆகும். அந்த உரிமை பழைய ஓய்வூதியத்திட்டத்தை மீண்டும் கொண்டு வந்ததாகவோ, தொகுப்பூதியம் மதிப்பூதியத்தில் பணிபுரியும் ஊழியர்களை காலவரை ஊதியத்தில் கொண்டு வந்ததாகவோ, ஊதிய முரண்பாடுகளை களைந்ததாகவோ மட்டுமல்ல நாம் இழந்திருக்கிற நம்மிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிற அனைத்து உரிமைகளையும் பெற்றுத்தந்ததாக இருக்க வேண்டும். அதற்கான ஆரம்பப் புள்ளியாக இந்த மாநாடு இருக்கும்.

இந்தியாவில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாக இருந்து வந்திருக்கிறது. சமூகநீதி, சமத்துவம், இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள், பெண்களுக்கான உரிமை போன்ற பல தளங்களில் முன்னோடியாக இருந்த மாநிலம் தற்போது எல்லாவற்றிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு காரணம் தமிழகத்தில் கல்வி வேலைவாய்ப்புகளில் இம்மாநில இளைஞர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுவதும் அரசுப்பள்ளிகள் மற்றம் அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் முயற்சிகள் நடைபெறுவதும் ஆகும். அரசு அலுவலகங்களில் அரசு ஊழியர்களும் அரசுப்பள்ளிகளில் ஆசிரியர்களும் முழுமையான அளவில் நியமிக்கப்பட்டு பணி செய்யும் வாய்ப்புகள் வழங்கப்பட்டு மத்திய அரசுக்கு இணையான உரிமைகளும் ஊதியமும் வழங்கப்பட்டால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்ட களங்களை துறந்துவிட்டு மக்களுக்கான பணியையும் மாணவர்களுக்கான பணியையும் செய்து இம்மாநிலம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற உழைப்பதுடன் சமுதாய மேம்பாட்டையும் பேணிக்காப்பதில் தீவிர கவனம் செலுத்துவார்கள். இதை இப்போதுள்ள அரசு கவனத்தில் கொள்ள வேண்டியதன் அவசியத்தை இந்த மாநாடு உணர்த்தும்.

சட்டங்களாலும் நிர்வாக விதிமுறைகாளாலும் உறுதிபடுத்தப்பட்டுள்ள அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை தருவதற்கு அரசாங்கங்கள் மறுப்பதும், குறைப்பதும், நிலுவைகளை தரமுடியாது எனக் கூறுவதும், ஊழியர்களுக்கான உத்தரவாதப்படுத்தப்பட்ட, உரிமைகள் மறுக்கப்படும்போது நீதிமன்றம் அரசை அதைக் கொடுக்கச்சொல்லி வலியுறுத்தாமல் இருப்பதும், தங்களது மறுக்கப்பட்ட உரிமைகளைக் கேட்டு ஊழியர்கள் போராட்டம் நடத்தினால் அதற்கு தடைவிதிப்பதும் மக்களாட்சித் தத்துவத்தை கேலிக்கூத்தாக்கும் நிகழ்வுகள்.

ஊதிய முரண்பாடுகளைக் களைய நாம் பத்தாண்டுகளுக்கு மேலாக போராடுகிறோம் வஞ்சிக்கப்படுகிறோம். பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர வேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுக்கிறோம் போராடுகிறோம். ஊதிய நிலுவை கேட்டு போராடுகிறோம். முள்வேலி தடுப்புகளால் முடக்கப்படுகிறோம். சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியத்தை வழங்க

வேண்டி போராடுகிறோம், அவை வெறும் பரிசீலனையில் உள்ள அறிவிப்புகளாவே உள்ளன. தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று குரல் கொடுத்தால், "பணியாளர்கள் பகுப்பாய்வுக் குழு" என்ற ஒரு குழு அமைக்கப்பட்டு நிரந்தரப் பணியிடங்களை ஒப்பந்தப் பணியிடங்களாகவோ அல்லது தற்காலிகப் பணியிடங்களாகவோ மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படுகிறது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுங்கள், காலிப் பணியிடங்களை நிரப்புங்கள் என்று சங்கெடுத்து ஊதுகிறோம் அநீதியை எடுத்துரைக்கிறோம்.

வந்து போனவர்கள் எல்லாம் லஞ்ச லாவண்யம் செய்து தின்று தீர்த்தபின்னர் கொஞ்ச நஞ்ச பணம்கூட கஜானாவில் இல்லை என்று பஞ்சப்பாட்டு பாடும் அரசாங்கங்கள் சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் தீர்த்துக்கட்ட நினைப்பது மக்கள் நலத் திட்டங்களையும், சலுகைகளையும் மற்றும் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளங்களையும்தான். வெயிலோ, மழையோ, பனியோ, புயலோ எத்தகைய இடர்ப்பாடுகளிலும் இயற்கைப் பேரிடர்களிலும் மக்கள் சேவையாற்ற அரசு ஊழியர்கள் உறுதுணையாக இருந்து வருகிறார்கள். இந்த நடவடிக்கையை சேவையாகப்பார்க்காமல் ஒரு அரசாங்கம் செலவாகப் பார்க்கும் என்றால் அந்த அரசாங்கத்திடம் இதயம் என்ற ஒன்று இல்லை என்றுதான் அர்த்தம். தங்கள் கணக்குப்புத்தகங்களில் லாபக்கணக்குகளை எட்டுவதற்காக, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைப்பக்கங்களை கிழித்துப்போட அரசாங்கங்கள் நினைப்பது இரக்கமற்ற அரக்ககுணமாகும்.

மேலும் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தைக் கைவிடக்போரியும், இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் அரசின் அரசாணை எண்.56ன் மூலம் அரசுத்துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கைகளைக் கைவிடக்கோரியும், சத்துணவு அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள் MRB செவிலியர்கள் உள்ளிட்ட சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் மூன்றரை லட்சம் ஊழிய்ரகளுக்கு காலமுறை ஊதியம் வழங்கிட வலியுறுத்தியும் தமிழக அரசுத்துறைகளில் காலியாக உள்ள நாலரை லட்சம் பணியிடங்களை உடனே நிரப்பிடக் கோரியும் தொடர்ந்து நாம் மேற்கொண்டு வரும் வலியுறுத்தல் இந்த அரசாங்கத்தின் காதுகளில் விழ வேண்டும் காரியம் ஈடேற வேண்டும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவும் இந்த மாநாடு உதவிடும்.

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் இன்றைய அரசாங்கங்கள் தாங்கள் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளை தனியார்வசத்திடம் ஒப்படைப்பதன் மூலம் தங்களுக்கான கடமைகளிலிருந்தும் ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களை தாயுள்ளத்தோடு தாங்கிப் பிடிக்கும் தர்மத்திலிருந்தும் விலகிக் கொள்ள நினைக்கின்றன. அரசாங்கம் என்ற சேவைமையம் தனியார்மயம் என்ற லாபமயத்திடம் அடகுவைக்கப்பட்டு விட்டது. இதன் விளைவு இளைஞர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் என்பதை நன்கறிந்தும் தமிழக அரசாங்கம் தனியார் நிறுவனத்தைப்போல் அரசு நிர்வாகத்தை 'அமர்த்து - துரத்து' என்ற அடிப்படையில் நடத்த ஆரம்பித்துள்ளதிலிருந்து விலகி தனியார் மயமாக்கல் விளிம்பு நிலை மக்களை அரசாங்கங்கள் கைகழுவிடப் பார்ப்பதன் ஆரம்பம் என்பதை அனைத்து மக்களுக்கும் உணர்த்த வேண்டியது இப்போது அரசு ஊழியர்களின் பிரதான கடமையாக மாறியுள்ளது.

அரசாங்க வேலையில் சேர்பவர்களுக்கு இனிமேல் ஓய்வூதியம் என்பது அவர்களின் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியமாகத்தான் இருக்கும் என்பதிலிருந்து தொடங்கி இன்று அரசுத்துறைகளையே தனியார்வசம் ஒப்படைக்கும் நிலைமைக்கு அரசு நிர்வாகம் வந்திருக்கிறது. இதன்விளைவுகள் நாம் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத சமூகப் பிரச்னைகளை ஏற்படுத்தும் என்பதைப்பற்றி ஆட்சியாளர்கள் சிறிதும் கவலைப்படவில்லை. அரசு நிர்வாகத்தை ஏழை எளிய மக்களுக்குரிய

பாதுகாப்புடன் மக்களின் அடிப்படைத் தேவைகள் பாதிக்காத வகையில் நிர்வகிக்க தனியார் மயங்களும், அவுட் சோர்சிங் முறைகளும், ஆட்குறைப்பு நடவடிக்கைகளும் ஒருபோதும் உதவாது.

அரசாங்க வேலைக்கு ஆள் எடுப்பதில் சுணக்கம், காலிப்பணியிடங்களை நிரப்பாமல் அப்படியே விட்டுவிடுதல், புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாதது. தேவைப்படும் இடங்களில் தற்காலிகப் பணியாளர்களை நியமித்துக் கொள்ளுதல், வேலை முடிந்ததும் அவர்களை விரட்டிவிடுதல், ஒப்பந்த முறையில் பணியாளர்களை அமர்த்துதல், அவுட்சோர்சிங் முறையில் ஊழியர்களை நியமித்தல் போன்ற பலகட்ட வடிகட்டலுக்குப்பின்னர் தமிழக அரசு பெரும்பான்மையான துறைகளை தனியார்வசம் ஒப்படைக்கும் முடிவில் உள்ளது. இதை எதிர்த்துப் போராட அரசு ஊழியர்கள் மட்டும் போராடினால் போதாது. தனியார் மயமாக்கலின் விளைவுகளை மக்களிடம் பிரச்சாரம் செய்து இதை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினால் ஒழிய தனியார் மயம் என்ற ஆபத்து இந்த நாட்டை விட்டு நீங்காது.

தமிழக அரசாங்கத்தில் பல்வேறு அரசுத்துறைகளில் தொகுப்பூதியம், மதிப்பூதியம், வரையறுக்கப்படாத ஊதிய விகிதம், தினக்கூலி ஆகியவற்றின் கீழ் லட்சக்கணக்கான ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்துக்கிடக்கின்றனர். இந்த இளைஞர்களின் எதிர்காலத்தை வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் இருளடையச் செய்து வருகிறது. இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துகொண்டு வேலைக்காக காத்திருப்போர் எண்ணிக்கை பத்துகோடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றும், கிராமப்புறங்களில் வேலை கிடைக்காத நபர்களின் எண்ணிக்கை 20 கோடி பேர்களுக்கும் மேல் என்றும் பல்வேறு நிறுவனங்களின் ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த நிலைக்கு பரிகாரம் தேட வேண்டிய நிலையில் மத்திய மாநில அரசுகள் உள்ளன.

தமிழக அரசுத்துறைகளில் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் விடப்பட்டுள்ள நிலை ஒரு புறமிருக்க, படித்துவிட்டு வேலை வழங்கப்படாமல் இருக்கும் இளைஞர்களும் பெண்களும் மறுபுறம். இவற்றுக்கிடையில் இளைஞர்களையும், பெண்களையும் மிகக்குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்தி அவர்களின் உழைப்புச் சக்தியைச் சுரண்டும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது.

இத்தகைய கொத்தடிமை கூலிமுறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், MRB செவிலியர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஊழியர்களின் உழைப்பு முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர்.

இதேபோல் மத்திய அரசின் திட்டங்களின் கீழ் மாநிலங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிறுவனங்களிலும் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிறுவனங்களிலும் முற்றிலும் ஒப்பந்த முறையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டு குறைவான ஊதியத்தில் பணியில் அமர்த்தப்படுகின்ற போக்குகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தேசிய பார்வைக்குறைபாடு கட்டுப்பாட்டு கழகம், மாநில தொழுநோயாளிகள் கழகம், தேசிய ஊரக சுகாதாரப் பணி, தேசிய நகர்ப்புற சுகாதாரப்பணி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம், தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்து கழகம், நோயாளிகள் நல கழகம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் போன்ற நிறுவனங்களின் சேவைகள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு விடக் கூடியவை அல்ல. காலவேக மாற்றத்தில் இத்தகைய நிறுவனங்கள்/ கழகங்கள்/ வாரியங்கள் தொடர்ந்து இயங்க வேண்டிய

அவசியம் உள்ள நிலையில் அங்கு பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு ஊழியம் செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும்.

ஊழலும் செஞ்சுட்டு, கொள்ளையும் அடிச்சுட்டு, ஜெயிலுக்கும் போயிட்டு, சம்பளமும் வாங்கிக்கிட்டு, பென்ஷனும் வாங்கிக்கிட்டு அரசாங்க கஜானாவை சுரண்டி சுரண்டி ஓட்டை போட்டுட்ட அமைச்சர்களும் முதல்வரும் அரசு ஊழியர்கள் வேலையே செய்யறதில்லை, அவங்களுக்கு கொடுக்கறதே தண்டச்சம்பளம்னு ஏக வசனம் பேசறதும், அடுத்த வேளை சோத்துக்கே வழியில்லாம இருக்கற ஏழைகள் இருக்கற இந்த நாட்டுல அதிக சம்பளம் கேட்டு போராடலாமான்னு கேக்கறதும் சாத்தான் வேதம் ஓதுகிற மாதிரியல்லவா இருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு கொடுக்கற சம்பளத்தை செலவா பார்க்கிற அரசாங்கம் இருக்கற வரைக்கும். மக்கள் நலத் திட்டங்கள் எல்லாம் நாட்டைஆளும் அரசியல்வாதிகளின் சூட்கேஸ்களையும் பீரோக்களையும் செழுமையாக்குமே தவிர ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒருபோதும் ஏற்றத்தை கொடுக்காது.

அரசு ஊழியர்கள் போராடுகிறார்கள். ஏன் போராடுகிறார்கள்? ஏதோ அவங்களுக்கு மட்டும் அதிக சம்பளம் கேட்டு போராட அவர்கள் என்ன இதயமற்றவர்களா? அரசு ஊழியர்கள் அரசு ஒப்புக்கொண்ட ஊதியத்தை கேட்டுத்தான் போராடுகிறார்கள். சம்பளக்கமிஷன் பரிந்துரைகளில் பரிந்துரைக்கப்பட்ட ஊதியத்தை கேட்டுத்தான் போராடுகிறார்கள். கமிஷன் போட்டு ஒரு சம்பளத்தை நிர்ணயித்த பின்னர் அந்த சம்பளத்துலயும் சொற்ப அளவில்தான் தருவேன் என்று அடம்பிடித்தால் அரசு ஊழியர்கள் போராடாமல் என்ன செய்வார்கள்? ஊழல் செய்யாமல் ஊர்பணத்தை கொள்ளையடிக்காமல் காண்டிராக்ட்டுகளில் கமிஷன் பெறாமல் தான் வாங்கும் சம்பளத்தை மட்டுமே நம்பி வாழ்க்கை நடத்தும் அரசு ஊழியர்கள் தங்களுக்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டதாக தரவேண்டிய ஊதியத்தை கேட்பது அதர்மமா?


அரசு ஊழியர்கள்-ஆசிரியர்களுக்கு எதிராக வரிந்து கட்டி பிரச்சாரம் செய்ய பத்திரிகைகளும், எம்,எல்,ஏ.க்களும், லெட்டர்பேடு சங்கங்களும், தொலைக்காட்சி ஊடகங்களும் முடுக்கிவிடப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கு உதவ அதிகார வர்க்கமும் அரசாங்கமும் தயாராக உள்ளன என்பதை நாம் அனைவரும் கவனத்துடன் கருத்தில் கொள்ளவேண்டும். இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு இடையில்தான் நாம் நமது கோரிக்கைகளை ஒன்றுபட்ட பெரும்சக்தியின் மூலமாக மட்டுமே வென்றெடுக்க முடியும். இப்போது திரண்டுள்ள அரசு ஊழியர் ஆசிரியர் என்ற மாபெரும் சக்தியைக் கொண்டு நாம் நம்முடைய இழந்த உரிமைகளை மீட்க வேண்டியதும் இருக்கின்ற உரிமைகளை காக்க வேண்டியதும் மிக அவசியமாகும்.

இவை அனைத்திற்கும் பதில் கூறும் விதமாக விடை தேடும் களமாக தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 14ஆம் மாநில மாநாட்டின் நிகழ்வுகள் அமைக்கப்பட்டுள்ளன. அரசு ஊழியர் சமுதாயத்தின் புதிய விடியலுக்கான மாநாடாக இது நிச்சயம் இருக்கும். அதை மாநாட்டில் கலந்து கொண்டு உறுதிபடுத்த அனைத்து அரசுத்துறை ஊழியர்களும் மாநாட்டுக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள். கூடுவோம், பேசுவோம், அரசிடம் கோரிக்கை வைப்போம். ஆட்சியாளர்களை திரும்பிப் பார்க்க வைப்போம். நிச்சயம் பறிக்கப்பட்ட உரிமைகளையும் நிறுத்தப்பட்ட சலுகைகளையும் பெற்றே தீருவோம்.

வலியை உணர மறந்துவிட்டால் அல்லது அந்த உணர்வை இழந்துவிட்டால் அது ஆபத்து மட்டுமல்ல...அழிவும்தான். சமூகத்தின் வலியை அது இழந்துவிடாமல் இருக்கவும், அந்த வலியின் காரணங்களை கண்டறிந்து அதனை துடைத்தெறியாமலும் வளர்ச்சி என்பது கட்டுக்கதை. வலியை உணர்த்துவதற்கே இன்று பயிற்சி தேவைப்படுகிறது. அந்த பயிற்சிக்கான ஒரு முயற்சிதான் இந்த 14ஆம் மாநில மாநாடு.

●

# சிங்காரச் சென்னையில். !
# படையென திரள்வோம்.. !!
# 14ஆம் மாநில மாநாட்டில்...!!!



1984 மே 6ல் உதயமான தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 37 ஆண்டுகளை நிறைவு செய்து 38வது ஆண் வீறு நடைப்போட்டுக் கொண்டிருக்கிறது. 37 ஆண்டுகளில் இதன் சாதனைகளை பட்டியலிட்டால் பக்கங்கள் போதாது. இந்த அமைப்பு துவங்கிய நாள் முதல் இன்று வரை அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகளுக்காக மட்டுமின்றி சகல பகுதி உழைப்பாளி மக்களின் கோரிக்கைகளுக்காவும் குரல் கொடுத்து வருகிறது. தொடர்ந்து போராடி வருகிறது. 37 ஆண்டு கால போராட்டங்களின் மூலம் எண்ணற்ற உரிமைகளை பெற்றுக் கொடுத்திருக்கிறது. நம் சாதனைகளில் சில...

அரசு ஊழியர், ஆசிரியர்களை ஒருங்கிணைத்து தொடர் போராட்டங்களை மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை 42 ஆண்டுகளுக்குப் பிறகு பெற்றோம்.

போனசா ? அது உற்பத்தி சார்ந்த தொழிலாளர்களுக்கு என்று பிற சங்கங்கள் சொன்ன நிலையில் விடாப்பிடியான போராட்டத்தின் மூலம் அதனை பெற்றுத் தந்தோம். அரசு ஊழியர்களின் சுயமரியாதையை பாதுகாக்க இயக்கம் கண்டு வெற்றி கண்டோம். பெண் ஊழியர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளில் தலையிட்டு பெண் உரிமை பாதுகாத்தோம். குறிப்பாக 12 மாத மகப்பேறு விடுப்பு உட்பட பெற்று தந்துள்ளோம். 2003 இந்திய தொழிற் சங்க வரலாற்றில் வேறு எங்கும் நிகழ்வாக பெற்றுக்கொண்டிருந்த உரிமைகள் பறிக்கப்பட்டபோதும், 1.76 லட்சம் பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டபோதும் ஊழியர்களை பாதுகாத்து, வரலாறு காணாத அடக்குமுறையை சந்தித்து, வீறுகொண்டு போராடி பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுத்தோம்.

வருவாய்த்துறை, கிராம உதவியாளர், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள், ஊர்ப்புற நூலகர்கள், எம்.ஆர்.பி செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து பிரிவு தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களின் முன்னேற்றம் அடைய தொடர்ச்சியான இயக்கங்கள் மூலம் குரல் கொடுத்துள்ளோம். அரசு ஊழியர், ஆசிரியர்களை ஒருங்கிணைத்து ஜாக்டோ-ஜியோ போராட்டத்தின் மூலம் கடந்த அதிமுக அரசு, 7வது ஊதிய மாற்றத்தை தர மறுத்து கொண்டிருந்த நிலையில் விரிவான போராட்டத்தை நடத்தி இந்திய வரலாற்றில் தலைமைச் செயலாளரை நீதிமன்றத்தில் நிறுத்தி 2017ல் ஊதிய மாற்றம் பெற்று கொடுத்துள்ளோம், கடந்த 10 ஆண்டுகளாக அதிமுக அரசின் அடக்குமுறையை எதிர்த்து தொடர்ச்சியான போராட்டத்தின் மூலம் 5068 பேரின் மீது குற்றக் குறிப்பாணை, 17பி, வழக்கு, ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டது. வேலை நிறுத்தப் போராட்ட காலங்களான 2016,2017,2018,2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத்த காலங்களுக்கு பணிக்காலமாகவும், அந்த கால பதவி உயர்வு, ஒழுங்கு நடவடிக்கை அத்தனையும் ரத்து செய்து பெற்று தந்துள்ளோம்.

2021ஆம் ஆண்டில நமது சங்கம் மிகப் பெரிய போராட்டங்களை நடத்தியுள்ளது. இதுவரை எந்த தொழிற் சங்கங்களும் செய்யாத தொடர் மறியல் மற்றும் சிறை நிரப்பும் போராட்டம் நடத்தி தமிழகத்தின் வரலாற்றில் அதிமுக அரசின் அடக்கு முறையை எதிர்த்து கோட்டையை முற்றுகையிட்டு வரலாறு படைத்துள்ளோம். அதன் எதிரொலிதான் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம். இத்தனை சாதனைகள் படைக்கப்பட்டிருந்தாலும் இன்னும் நம்முன் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன.

1. புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்பட்டு பழைய பயனளிப்பு ஓய்வூதியத் திட்டத்தை எல்லோருக்கும் பெற்று கொடுத்தாக வேண்டும்.
2. தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு முறையான காலமுறை ஊதியமாக மாற்றப்பட வேண்டும்.
3. முடக்கப்பட்ட அகவிலைப்படி மற்றும் சரண்டர், பொது சேமநல நிதி வட்டி குறைப்பு போன்ற சலுகைகளை பெற்றாக வேண்டும்.
4. அரசுத்துறையில் இருக்கும் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். துறைகளில் அவுட்சோர்சிங் ஒப்பந்தமுறை ரத்து செய்து காலமுறை ஊதியத்தில் பணி நியமனம் செய்யப்பட வேண்டும்.
5. மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் படிகள் அனைத்தும் நாம் பெற்றாக வேண்டும்.
6. ஊதிய முரண்பாடுகள் களையப்பட வேண்டும், சாலைப் பணியாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும்.
7. 1.1.2016 முதல் 21 மாத நிலுவை ஊதியம் பெற்றாக வேண்டும.
8. வேலை பளுவால் விரக்தியுறும் நிலை மாற்றப்பட வேண்டும்.

பொதுவாக பறிக்கப்பட்ட உரிமைககளை மீளப் பெறுவதற்கு கூட்டு இயக்கங்கள் என்பது முதலில் நாம் முன் கையெடுத்து இறங்குவதும், மற்ற அமைப்புகள் அதன்பின் ஒவ்வொன்றாக வந்து இணைந்து கொள்வதும் அது பேரியக்கமாக மாறி வெற்றி பெற்றிருக்கிறது என்பதுமே கடந்தகால வரலாறாகும். அந்த வகையில் நாம் வலுவான இயக்கங்களை திட்டமிட்டு களமிறங்கியதன் விளைவாக சில கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளோம். தொடர்ந்து வலுவான இயக்கங்களை நடத்துவதன் மூலமாக இதர நிலுவை கோரிக்கைகளையும் வெல்ல முடியும் என்பதோடு, இதர அமைப்புகளையும் அப்போராட்டங்களில் இணைக்க முடியும் என்ற நம்பிக்கையோடு இயக்கங்களை தொடர வேண்டியுள்ளது.

ஒன்றிய அரசின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக மக்களோடு இணைந்து போராடும் விதத்தில் மக்களை நம்மோடு இணைக்க “மக்களை நோக்கிய பயணத்தில்” மேற்கொள்வோம். அதற்கான நடவடிக்கைகளை மாவட்ட மையங்களில் திட்டமிட்டு செயலாற்றுவோம்.

மக்களை நோக்கிய பயணம் தொடர்பான நடவடிக்கைகளை சில மாவட்டங்கள் தொடர்ந்து செய்து வருகின்றன. ஆனால் பரவலாக அனைத்து மாவட்டங்களிலும் அத்தகைய நடவடிக்கைகள் இல்லை. இதுகுறித்து உறுதியான திட்டமிடலை அனைத்து மாவட்டஙகளிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அத்தோடு கடந்த மாநில மாநாட்டில் எதிர்கால லட்சியங்களாக வகுத்துக்கொண்ட உறுப்பினர் சேர்க்கை, பயிற்சி வகுப்புகள் உள்ளிட்ட இதர பணிகளை நிறைவேற்றிட 14ஆம் மாநில மாநாடு உறுதி ஏற்கவேண்டும்.

தோழர்களே !

நமது குறிக்கோள் என்பது

காலக்கெடு கொண்ட அளவுதான்

அதை தொடர்ந்து முடிக்கும் வரை செய்ய முடியாதது போலதான் இருக்கும். பல மைல் தூரம் பயணம் ஓர் அடியில்தான் துவங்குகிறது என்பதைபோல நம்முடைய குறிக்கோளை அடைய 14ஆம் மாநில மாநாட்டில் திட்டமிட்டு அடியெடுத்து வைப்போம்.

நாம் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்கும் எதிராக உறுதிமிக்க இயக்கங்களை நடத்திட உறுதி ஏற்போம் இம்மாநாட்டில்...! இன்னும்... இன்னும்... ஏராளமாய் இருக்கிற நம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண, அதற்கென திட்டமிட படையென திரள்வோம் சென்னையில்......!

ஒன்றுபடுவோம்! போராடுவோம்!! முன்னேறுவோம்!!! ●

# அரசியல், சினிமா, விளையாட்டு
# ஆபத்து!

- ஜிஜி

சென்றவாரம் என் பால்ய நண்பர் ஒருவர் வீட்டிற்கு சென்றிருந்தேன். அவருக்கு மூன்று மகன்கள். சொந்த ஊரில் உள்ள வீட்டையும் காட்டையும் விற்றுவிட்டு சென்னையில் ஒரு அடுக்ககத்தில் ஒரு பிளாட் வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்துவிட்டார். கூட்டுக்குடும்பம், விவசாயம், தலைமுறை தலைமுறையாக இருந்தவீடு எல்லாம் அவர் அப்பா காலத்தோடு போய்விட்டது.“

“ஏன் சரவணன் கிராமத்துவீடு நிலபுலன்கள் எல்லாத்தையும் வித்துட்டே?''

“கிராமத்துல என்ன வளர்ச்சி இருக்கு நண்பா. விவசாயம் நொடிஞ்சு போச்சு. எந்த டெவலப்மெண்டும் ஊரில் இல்லை. அங்கே இருந்தால் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் மிக மிகக்குறைவு. வயல்ல நாங்க எல்லோரும் கஷ்டப்பட்டு உழைச்சா மூணுவேளை சோறு சாப்பிடலாம். அதைத்தாண்டி வாழ்க்கையில வளர்ச்சிக்கு வாய்ப்பே இல்லை. அதனாலதான் சென்னைக்கு வந்துட்டோம்.'' என்றார்.

அப்போது அவருடைய மூத்த மகன் தோளில் ஒரு பெரிய ஷோல்டர் பேக், துணி சூட்கேஸை தள்ளிக்கொண்டு வெளியே வந்தான். “ஹாய் அங்கிள்'' என்று கைகாட்டி விட்டு, “டாடி, வெளியில புரடக்ஷன் கார் 20 நிமிஷமா வெயிட்டிங். நான் நைட் டிரெயின்லே போகும்போது பேசறேன்.'' என்று டாடா சொல்லிவிட்டு கிளம்பி விட்டான்.

அவன் போனதும்,“சரவணா இது உன் பெரிய பையன் ரகுதானே. ஆள் நல்லா வளர்ந்து பர்சனாலிட்டியா ஆயிட்டான். என்ன பண்றான்?''

“சினிமாவுல அசிஸ்டன்ட் டைரக்டர். டைரக்டர் சந்திரமோகன் கிட்டே இருக்கான். இன்னும் ரெண்டு வருஷத்துல தனியாவே டைரக்ட் செய்வான்.'' என்றான் சரவணன்.

சரவணன் பெரிய மகன் வெளியே போனதும் தோளில் கிரிக்கட் கிட்பேக்கை மாட்டியவாறு அவரின் மூன்றாவது மகன் வந்தான். சரவணன் அவனிடம் என்னைக்காட்டி “சீனு இது யாருன்னு தெரியுதா? பாரியோட அப்பாடா.'' என்றார். “ஸாரி அங்கிள் பாத்து ரொம்ப வருஷமாயிடுச்சி. உடனே ஞாபகத்துக்கு வரலே.'' என்றான். “பேசிட்டிருங்க அங்கிள் நான் பிரஷப் ஆகிட்டு வந்துடறேன்.'' என்று கிட்பேக்குடன் உள்ளே போனான்.

“சீனு என்ன படிக்கிறான்.'' என்றேன். லயோலாவுல பி.ஏ.பண்றான். கிரிக்கெட் பிளேயர். எப்படியாவது தோனி அல்லது விராட்கோலி மாதிரி பெரிய கிரக்கட்டரா ஆயிடணும்னு போராடிக்கிட்டிருக்கான். ரெண்டாவது பையன் தேசிய கட்சியில மாநில இளைஞரணி துணைச் செயலாளரா இருக்கான்.'' என்றான். என்னால் வாயை அடக்கிக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. “ஏன் சரவணா நீ சின்ன வயசுல இருக்கும்போதே அடிக்கடி சொல்லிகிட்டிருப்பே இல்லே, நம்மாலதான் படிக்க முடியல நம்ப பசங்களையாவது ஐஏஎஸ், ஐபிஎஸ், சயின்டிஸ்டா ஆக்கணும்னு?'' என்றேன்.

“சொன்னேன்தான். ஆனா இன்னிக்கு அந்த படிப்பு படிச்சவங்க இருக்கிற துறைகளில் கிடைக்கிற பணம் புகழைவிட சினிமா, விளையாட்டு, அரசியல்லதானே பணம் கொட்டிக்கிடக்கு.'' என்றான். “இன்னிக்கு ஐஏஎஸ் ஆபிசர் வாங்கற சம்பளமும் சினிமா நடிகர் அல்லது இயக்குநர் வாங்கற சம்பளமும் ஒன்னா? ஐபிஎஸ் ஆபிசர் வாழ்நாள் முழுதும் வாங்கற சம்பளம், கிரிக்கட் வீரர்கள் தோனி,



விராட் கோலி போன்றவர்களுடைய ஒரு ஆண்டு சம்பளத்து ஈடாகுமா? அமைச்சர்களும் கட்சியில பெரிய ஆளுங்களும் சேர்க்கற சொத்துக்கும் சயிண்டிஸ்ட் வாங்கற சம்பளத்துக்கும் சம்பந்தம் எதுனா இருக்குமா? அதனாலதான் என்னுடைய பசங்களோட பாதையை மாத்திட்டேன். இவங்க மூணு பேரும் உச்சத்துக்கு வருவாங்களான்னு தெரியாது ஆனா இதுல யாராவது ஒருத்தர் உச்சத்துக்கு வந்தாக்கூட போதும்'' என்றான். சரவணன் சொன்னது உண்மைதான். அரசியல், சினிமா, விளையாட்டு என்ற இந்த மூன்று துறைகளைச் சேர்ந்தவர்களின் சம்பாத்தியமும் கௌரவமும் எல்லா வரம்புகளுக்கும் அப்பாற்பட்டுத்தானே இன்று இருக்கிறது. சிறந்த விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பொறியாளர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள் போன்றோர் ஆண்டுக்கு 15 லட்சம் முதல் 25 லட்சம் ரூபாய் வரை சம்பாதிக்கும் நாட்டில், ஒரு திரைப்பட நடிகர் ஆண்டுக்கு 10 கோடி முதல் 100 கோடி ரூபாய் வரை சம்பாதிக்கிறார். தோனி, விராட்கோலி போன்ற கிரிக்கட் வீரர்களின் அதிகாரபூர்வ ஆண்டுச்சம்பளம் 200 கோடியிலிருந்து 250 கோடி வரைக்கும் இருக்கிறது. அரசியல்வாதிகள் அமைச்சர்களாகிவிட்டாலோ அல்லது அவர்கள் சார்ந்திருக்கும் கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்தாலோ அவர்கள் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்று நாம் யாரும் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது.

ஆபாசம், வக்கிரம், வன்முறையை பேசும் சினிமா, மேட்ச் பிக்சிங், போக்கிரித்தனம் நிறைந்த கிரிக்கட், புட்பால் விளையாட்டுக்கள், லஞ்ச லாவண்யம், ஊழல், கொலை, கொள்ளை நிறைந்த அரசியல், இவைதான் இன்று நாட்டின் புதிய தலைமுறையினரைக் கவர்ந்த பகுதிகளாக ஆகிவிட்டது. இந்த துறைகளில் எல்லாம் தாறுமாறாக சம்பளங்கள் நிர்ணயிக்கப்படுவதால் இப்போது இளைஞர்கள் அதன்பக்கம் ஓட ஆரம்பித்திருக்கிறார்கள். பணம். பணம். பணம். பணமிருந்தால் எல்லாவற்றையும் சாதித்துவிடலாம் என்கிற மூடநம்பிக்கையும், முட்டாள்தனமும்தான் இதற்கெல்லாம் காரணம். தாங்கள் நடிக்கும் ஒவ்வொரு திரைப்படத்திற்கும் 50 கோடி அல்லது 100 கோடி சம்பளம் வாங்கும் பெரிய நடிகர்கள், நடிகைகள், ஆண்டுதோறும் 200 கோடி முதல் 300 கோடி வரை சம்பாதிக்கும் விளையாட்டு வீரர்கள், இந்த சமுதாயத்திற்கு செய்த, செய்துகொண்டிருக்கும் பங்களிப்பு என்ன என்பதை நீங்களே பட்டியலிடுங்கள். ஆனால் இவர்களை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு மக்கள் அவர்களை தங்கள் கடவுள்களாகப் பார்க்கிறார்கள். தாங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை இவர்களுக்காக செலவழிக்கிறார்கள். ஊழலில் திளைக்கும் அரசியல்வாதிகள் மக்களுக்காக திட்டம் தீட்டுவதாக சொல்லிக் கொண்டு அதுல கொள்ளையடிப்பதுதான் இன்றைய அரசியலாகி விட்டது.

50-60 ஆண்டுகளுக்கு முன்புவரை பிரபல நடிகர்கள் சாதாரண சம்பளம் பெற்று வந்தனர். 20-30 ஆண்டுகளுக்கு முன்புவரை கிரிக்கட் வீரர்களின் சம்பாத்தியமும் சிறப்பாக இல்லை. 40-50 ஆண்டுகளுக்கு முன்பு வரை அரசியலில் இவ்வளவு கொள்ளையடிக்கப்படவில்லை. 50 ஆண்டுகளுக்கு முன்புவரை திரைப்படங்கள் இவ்வளவு அசிங்கமாகவும், ஆபாசமாகவும் எடுக்கப்படவில்லை. கிரிக்கட் வீரர்களும், அரசியல்வாதிகளும் கடவுள்களாக கொண்டாடப்பட்டதில்லை. ஆனால் இவர்களிடம் இன்று பெரும்பான்மை மக்கள் மயங்கி கட்டுண்டு தங்கள் செல்வங்களை எல்லாம் வாரியிறைக்கும் மயக்கநிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

சினிமா என்ற கலையும், விளையாட்டு என்கிற திறமையும், அரசியல் என்ற சேவையும் இன்று வியாபாரமாக ஆகிவிட்டதால் சமூகத்தில் பல ஒழுங்கீனங்கள் அரங்கேறி வருகின்றன. சில மாதங்களுக்கு முன்பு கொரோனாவால் ஐரோப்பா கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த போது கொரோனா தடுப்பூசியை கண்டுபிடிக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ள மக்களிடம் நிதி கோரப்பட்ட நிலையில் மக்கள் அதற்கான பங்களிப்பை சரிவர செய்யாததால் டாக்டர்கள் தடுப்பு மருந்தை கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்பட்டது. மேலும் டாக்டர்கள் தொடர்ச்சியாக பல மாதங்கள் கொஞ்சம்கூட விடுப்பு இல்லாமல்

கொரோனா சிகிச்சை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததால் மிகுந்த சோர்வும் மன உளைச்சலுக்கும் ஆளாகியிருந்தனர். அந்த நேரத்தில் போர்ச்சுகல் மருத்துவர் ஒருவரிடம் கொரோனா நோயாளி "இந்த வியாதிக்கு எப்போது மருந்து கண்டுபிடிப்பீர்கள்?'' என்று கேட்டபோது அவருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது "ரொனால்டோவிடம் நீங்கள் மில்லியன் கணக்கான டாலர்களைப் கொடுப்பீர்கள், அவருடைய விளையாட்டை பார்ப்பதற்காக. ஆனால் எந்த ஒரு ஆராய்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் நீங்கள் ஒரு பைசா கூட பங்களிக்க முன்வராதபோது நாங்கள் எப்படி தடுப்பு மருந்தை கண்டுபிடிப்போம் என்று எதிர்பார்க்கிறீர்கள்? ஒரு கொடிய வைரஸுக்கு ரொனோல்டோ போன்றவர்களிடம் சென்று ஒரே நாளில் தடுப்பு மருந்து கண்டுபிடித்துத் தரச்சொல்லி கேளுங்கள்.'' என்றாராம்.

ஒருமுறை அப்போதைய வியாட்நாம் அதிபர் ஹோசிமின் இந்தியா வந்தபோது இந்திய அமைச்சர்களுடனான சந்திப்பின் போது அங்கு வந்திருந்த தூதுக்குழுவின் உறுப்பினர்களிடம், "நீங்கள் எல்லாம் என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டாராம்.

அதற்கு அவர்கள், "நாங்கள் அரசியல் செய்கிறோம்.'' என்றார்களாம்.

இந்த பதிலை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதனால் அவர் தூதுக்குழு உறுப்பினர்களுக்கு புரியும்படி "உங்கள் தொழில் என்ன?'' என்று கேட்டாராம்.

அதற்கு அவர்கள் "அரசியல் எங்கள் தொழில்'' என்றார்களாம். ஹோசிமின் சற்று எரிச்சலடைந்து, "ஒருவேளை உங்களுக்கு நான் கேட்பதன் அர்த்தம் புரியாமல் இருக்கலாம். நானும் அரசியல் செய்கிறேன். ஆனால் தொழிலால் நான் ஒரு விவசாயி, விவசாயம்தான் என் வாழ்வாதாரம். காலையிலும் மாலையிலும் நான் என் வயல்களுக்கு சென்று வேலை செய்கிறேன். பகலில் ஜனாதிபதியாக என் பொறுப்பை கவனிக்கிறேன். அதுபோல் நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்'' வியாட்நாம் ஜனாதிபதியின் இந்தக் கேள்விக்கு தூதுக்குழுவினரிடம் பதில் இல்லை. தூதுக்குழுவில் ஒருவர் தோளைக்குலுக்கி "அரசியல்தான் எங்கள் தொழில்'' என்று மீண்டும் கூறினாராம். தூதுக்குழு உறுப்பினர் கூறியது உண்மைதான். இன்று இந்தியாவில் சிலகோடி மக்களின் வாழ்வாதாரம் அரசியலால் ஆதரிக்கப்படுவதாக ஒரு புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. அதாவது இவர்கள் அரசியல், அரசியல் கட்சிகள் சம்பந்தப்பட்ட வேலைகள் மட்டும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இளம் மாணவர்களின் இலட்சியங்கள் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்களாக ஆவதிலிருந்து சிதறி நடிகர்கள், அரசியல்வாதிகள் மற்றும் விளையாட்டுவீரர்களாக ஆவதாக மாறியிருக்கிறது. இப்படி சமூக சிந்தனையிலிருந்து விலகி தங்களுடைய சொந்த பொருளாதார முன்னேற்றத்துக்காக இளைஞர்கள் பாதைமாறிப்போனால் அந்த நாடு முன்னேற முடியாது என்பதை நாம் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். நடிகராக, விளையாட்டு வீரராக, அரசியல்வாதியாக ஆக விரும்பும் பலகோடி இளைஞர்களுக்கும் அந்த வாய்ப்புகள் கிடைக்கப்போவதில்லை என்கிற நிதர்சனத்தையும் அவர்களில் ஒரு சிலர் மட்டுமே உயரத்திற்கு போகமுடியும் என்பதையும் உணர வேண்டும். இதன் விளைவுகள் சமூக அறிவு, கலாச்சார ரீதியாக அந்த நாட்டை பின்னுக்குத் தள்ளிவிடும் என்பதையும் அத்தகைய நாட்டின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் எப்போதும் ஆபத்தில் இருக்கும் என்பதையும் நாம் நம்முடைய குழந்தைகளுக்கும் நம்முடன் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் இளைஞர்களுக்கும் உணர்த்த வேண்டும். எந்த நாட்டில் தேவையில்லாத சம்பந்தமில்லாத துறைகளின் ஆதிக்கம் வளர்ந்து கொண்டே போகிறதோ அந்த நாடு நாளுக்குநாள் நலிவடைந்து கொண்டே இருக்கும். நாட்டில் ஊழல்வாதிகள் தேசவிரோதிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும். நேர்மையானவர்கள் ஓரங்கட்டப்படுவார்கள். தேசியவாதிகள் கடினமான வாழ்க்கை வாழ நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

எனவே, நம்முடைய பிள்ளைகளை, நேர்மையான, மனசாட்சியுள்ள, போர்க்குணமிக்க மற்றும் தேசப்பற்றுள்ள குடிமக்களாக, சமூக சேவகர்களாக வளர்த்து மேம்படுத்துவதற்கான சூழலை நாம் உருவாக்குவோம். நமது நாட்டின் கலாச்சாரம் பாரம்பரியம் ஒற்றுமை ஆகியவற்றுக்கு எந்தவித பாதிப்பும் வராமல் பாதுகாப்போம். ●

கவிதை

# சிறக்கும் மாநாடு வரலாறாகும்

- பெரணமல்லூர் சேகரன்

நெருப்பாற்றில் நீந்தும் காலம்
பொறுப்பான மாநாட்டுக் கோலம்
வெறுப்பான அரசியல் பேசும்
தெறிப்பான எதிர்ப்பலை வீசும்

முன்னோர் ஈட்டிய சொத்துக்கள்
முனைமுகம் நின்ற பொக்கிஷங்கள்
பின்னோர் அழிக்கும் அவலங்கள்
கண்ணேர் நிகழும் காட்சிகள்

உரிமைகள் பறிப்பில் நிகரற்றோர்
உண்மைகள் மறைக்கும் பொய்யர்கள்
ஒன்றிய அரசின் கொடுங்கோல்கள்
ஒன்றாத கொள்கைக் கோமான்கள்

வேற்றுமையில் ஒற்றுமை கண்டவர்கள்
போற்றுமுயர் மக்கள் இந்தியர்கள்
ஒற்றுமையில் வேற்றுமை விதைத்தவர்கள்
ஒன்றிய ஆட்சியின் வீணர்கள்

தேசத்தை விலைபேசும் கூட்டம்
பாசிச ஆட்சியின் கொட்டம்
நீக்குவோம் மக்களின் வாட்டம்
ஆக்குவோம் சமதர்மத் திட்டம்

அநீதிக் கெதிர்சமர் புரிந்தவர்கள்
ஆட்சியில் மாநில அரசேற்றவர்கள்
ஆட்சியும் இனிதே நடத்துபவர்கள்
காட்சியில் சிற்சில மறந்தவர்கள்

மறந்து கொண்டிருப்பது ஆள்வோரே
திறந்து காட்டுபவர் நம்மவரே
துறந்த ஓய்வூதியம் பெற்றிடவே
சிறந்த வியூகங்கள் வகுத்திடவே

கூடும் மாநாடு சென்னையிலே
கேடுகள் நீங்குக உண்மையிலே
வடுக்கள் மறவா தன்மையிலே
இடுக்கண் நீக்கும் போர்வாளுடனே

இதுவரை மாநாடு கண்டது
ஈராண்டுக் கொருமுறை என்பது
எதுவரை பொறுப்பது கேட்பது
எரிதழல் ஏந்தச் சொல்வது

காட்டிக் கொடுப்பவர் குயுக்தியை
சுட்டிக் காட்டும் மாநாடு
ஒட்டிக் கொள்ளும் வேற்றுமையை
வெட்டி எறிந்திடும் மாநாடு

கடந்த பயணத்தின் ஆய்வுகள்
கடைந்து அனுபவப் பாடங்கள்
கற்று கட்டுவோம் உருக்கென
பற்று மேவிட அமைப்பினை

வர்க்க உணர்வது உயிராகும்
தர்க்க வாதங்கள் எருவாகும்
மூர்க்க அடக்குமுறை தவிடாகும்
சிறக்கும் மாநாடு வரலாறாகும்

# போர்முனையானது ஏர்முனை

- தெ. வாசுகி

ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை
பாசிசத்தின் பாசாங்குகளை
கிழித்தெறிந்த கூர்முனை
விவசாயிகளின் ஏர்முனை

அகில உலகை ஆட்டிப்படைக்கும்
அகோரப்பசியில் அலைந்து திரியும்
முதலாளித்துவ லாபவெறியின் நோக்கமே
மூன்று வேளாண் சட்டங்களே

கவளச் சோற்றுக்கும் கார்ப்பரேட்டுகளிடம்
கையேந்தும் நிலை வருமோ
கிளர்ந்தெழுந்த போராளிகளே
விவசாயிகளே தொழிலாளர்களே

காலிஸ்தான் பாகிஸ்தான்
நக்சலைட் ஊடுருவல் என
களங்கம் விதைத்த காட்டுமிராண்டிகள்
உருக்கு போன்ற ஒற்றுமையில்
உருக்குலைந்து போனார்கள்

காவல் துறையும் இராணுவமும்
ஆளும்வர்க்க அடக்குமுறை கருவியே
உறுதி மிக்க போராட்டத்தை
உடைத்தெறிய எண்ணியே

தப்புக்கணக்கு போட்டார்கள்
தண்ணீரை பீய்ச்சினார்கள்
முட்கம்பி வேலியிட்டும்
சாலை நடுவே பள்ளம் பறித்தும்

உணவும் குடிநீரும் மறுத்தபோதும்
எழுநூறு விவசாயிகள் மாண்டபோதும்
உயிரை உருக்கும் உரிமைப்போராட்டம்
நெடுந்துயரின் பின்னோட்டம்
நினைத்துப்பார்த்தால் குலைநடுங்கும்
நம் நெஞ்சுக்கூட்டிலும் இரத்தம் கசியும்

மூன்று வேளாண் சட்டங்களை
தகர்த்தெறிந்த போராட்டம்
தன்னிகரில்லாத போராட்டம்
மனித உரிமையும் ஜனநாயகமும்
மீட்டெடுத்த போராட்டம்

அகில உலக விவசாயிகளே
தொழிலாளர்களே
உழைக்கும் வர்க்கமே ஒன்று கூடுவோம்
புதியதோர் ஜனநாயகம் படைக்க
பாரில் புத்தொளி பாய்ச்சுவோம் !

கட்டுரை

# குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையமும், விதிகளும்


- கோ.பழனியம்மாள்

**காண்பர் அனைவரையும் ரசிக்க வைக்கும் ஒரு சிரிப்பு இவ்வுலகில் உண்டு எனில் அது குழந்தையின் சிரிப்பு மட்டுமே**

சுயமாக முடிவெடுக்கும் அளவுக்கு அனுபவமோ, பக்குவமோ பெற்றிராததால் தங்களது சின்ன சின்ன தேவைகளுக்கும் பெற்றோர்களையும், ஆசிரியர்களையும், பெரியவர்களையும் சார்ந்து வாழ்பவர்கள் குழந்தைகள். குழந்தை பருவத்தில் ஏற்படும் பாதிப்பானது அவர்கள் வாழ்க்கை முழுவதும் தொடர்கிறது. அந்த பாதிப்பானது குழந்தைகளை மட்டுமின்றி, சமூகத்தையும் பாதிக்கிறது. எனவே, குழந்தைகள் அதிக கவனத்துக்கு உரியவர்களாகின்றார்கள்.

குழந்தைகளுக்கு எதிராக பாலியல் ரீதியான தொந்தரவுகள், குழந்தை தொழிலாளராக நடத்தப்படுதல், உழைப்பு சுரண்டல், கல்வி மறுப்பு, குழந்தை திருமணத்துக்கு உள்ளாக்கப்படுதல், குழந்தைகள் கடத்தப்படுதல் உள்ளிட்ட ஏராளமான வன்முறைகள் அனுதினமும் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இதில் ஏதாவதொரு வன்முறை குறித்த பதிவுகள் இல்லாத தினசரி நாளிதழ்களைக் காண்பதென்பது அரிதிலும் அரிதான ஒன்றாகிவிட்டது.

குறிப்பாக, வகுப்பறை வன்முறைகள் (Corporal Punishment), சமீப காலமாக பத்திரிகைகள், கட்டுரைகள், விவாதங்கள் உள்ளிட்டவைகளில் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டாண்டு காலமாக வகுப்பறைகளில் மட்டுமின்றி, தங்களது சொந்த வீடுகள், வேலைத் தளங்கள் போன்ற இடங்களிலும் குழந்தைகள் சொல்லொண்ணா வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை பல்வேறு ஆய்வுகளும், பதிவுகளும் உறுதிபடுத்துகிறது. வகுப்பறை வன்முறைகள் தொடர்பான குற்ற நிகழ்வுகளின் போதும், அது ஒரு தனிக் குற்றமாக பதிவு செய்யப்படாமல், பொதுவான குற்ற பிரிவுகளின் கீழ் குற்ற வழக்காகப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்படுகிறது.



நாட்டில் மனித உரிமைகள் பாதுகாப்புக்காகவும், மகளிர் பிரச்சனைகள் குறித்து விசாரிக்கப்படவும் ஆணையம் உருவாக்குவது தொடர்பான சட்டங்கள் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பாகவே இயற்றப்பட்டுள்ளன. மேலும், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், பட்டியல் இனத்தவர் தங்களுக்கான பிரச்சனைகள் குறித்து கண்காணிக்கவும், அதில் தலையீடு செய்யவும் தேசிய மற்றும் மாநில அளவில் ஆணையம் வேண்டும் என்று தொடர்ந்து தலையீடு செய்து ஆணையங்களையும் பெற்றுவிட்டார்கள். ஆனால் நாட்டில் நான்கில் ஒரு பங்குள்ள குழந்தைகளுக்காக, குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் தொடர்பான சட்டம் பல்வேறு தடைகளைத் தாண்டி 2005ல் தான் இயற்றப்பட்டது.

**குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய சட்டம், 2005:**

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் விரைவான விசாரணைக்கு வழிவகுத்தல், குழந்தை உரிமை மீறல்கள் மற்றும் அது தொடர்பான நிகழ்வுகள் குறித்து விசாரித்தல்,

அதற்காக தேசிய மற்றும் மாநில அளவில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்களையும் மாநில அல்லது மாவட்ட அளவில் குழந்தைகள் நீதிமன்றங்கள் உருவாக்கப்படுதல் என்பதையும் நோக்கமாகக் கொண்டு, கடந்த 2005ம் ஆண்டில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய சட்டம் தேசிய அளவில் இயற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2006ம் ஆண்டில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணைய விதிகள் உருவாக்கப்பட்டன.

சட்டம் இயற்றப்பட்டு இரண்டாண்டுகளுக்குப் பிறகு, கடந்த மார்ச் 2007ம் ஆண்டில்தான் தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் இந்தியாவில் உருவாக்கப்பட்டது. குழந்தை உரிமைகள் செயற்பாட்டாளர் திருமிகு. சாந்தா சின்கா என்பவர் அந்த ஆணையம் தொடங்கப்பட்டது முதலாக தற்போது வரையிலும் அதன் தலைவராக இருந்து வருகிறார். இந்த ஆணையத்திற்கு கூடுதல் அதிகாரம் கொடுக்கும் விதமாக, அதன் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் அதன் அலுவலர்கள் ஆகியோர், பொது ஊழியர்களாக கருதப்படுவார்கள் என இந்த சட்டம் கூறுகிறது.

**மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம்:**

தேசிய அளவில் உள்ளது போல், ஒவ்வொரு மாநிலத்திலும், மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த சட்டம் கூறுகிறது. இதன் காரணமாக நாட்டில், டெல்லி, ராஜஸ்தான், மகாராஷ்டிரா, மத்தியபிரதேசம், கர்நாடகம், கோவா, பீகார், அஸ்ஸாம் உள்ளிட்ட 14 மாநிலங்களில் மட்டுமே மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் வெவ்வேறு வடிவங்களில் அனுதினமும் மாநிலமெங்கும் பரவலாக நடத்தப்பட்டு வருவதாக செய்திகள் வெளிவரும் சூழலில், இன்றளவிலும் தமிழ்நாட்டில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மாநில ஆணையம் உருவாக்கப்படவில்லை என்பதோடு, குழந்தை உரிமைகள் பாதுகாப்பு மாநில ஆணையத்திற்கான விதிகளும் உருவாக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது.

**குழந்தைகள் நீதிமன்றம்:**

மகளிருக்காக மகளிர் நீதிமன்றம், பட்டியல் இனத்தவருக்கான சிறப்பு நீதிமன்றங்கள் ஏற்கனவே மாவட்ட அளவில் இயற்றப்பட்டுள்ளது போல, குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளின் வீரியத்தைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் குறித்த வழக்குகளில் விரைவான விசாரணைக்காக மாநில அளவில் ஒன்று அல்லது மாவட்டங்கள் தோறும் குழந்தைகளுக்கான சிறப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும் என்பதும், அந்த நீதிமன்றங்களில் சிறப்பு அரசு வழக்கறிஞர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்பதும் இந்த சட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். ஆனால் தமிழ்நாட்டில், குழந்தைகளுக்கான சிறப்பு நீதிமன்றமானது மாநில அளவிலோ அல்லது மாவட்ட அளவிலோ இன்றளவிலும் உருவாக்கப்படவில்லை.

**அதிகாரங்கள்:**

குழந்தைகளுக்கு எதிரான வன்முறை நிகழ்வுகளின் போது, அதுதொடர்பான நபர்களுக்கு அழைப்பாணைகள் அனுப்புதல், வாக்குமூலம் பெறுதல், ஆவணங்களை தாக்கல் செய்ய கோருதல், விசாரணை செய்தல் என்பது போன்ற வழிமுறைகளைக் கையாளுதல், அதன்பிறகு தேவையின் பொருட்டு, உரிய அதிகாரம் பெற்ற நீதித்துறை நடுவருக்கு அந்த அறிக்கைகளை அனுப்பி வைத்தல், உரிய துறைக்கு தொடர்புடைய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தல், உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தை அணுகி வழக்கு தொடர்பான தேவையான ஆணைகளைப் பெறுதல், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அல்லது அவர்களது குடும்பத்ினருக்கு இடைக்கால நிவாரணம் அளித்திட உரிய அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்தல் போன்ற அதிகாரங்களைக் கொண்டது குழந்தைகளுக்கான தேசிய அல்லது மாநில ஆணையம்.

**குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி சட்டம், 2009:**

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி வழங்குதல் தொடர்பான சட்டத்தில்

மற்றும் அதனை தொடர்ந்து 2010ம் ஆண்டில் இயற்றப்பட்ட குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி விதிகள் ஆகியவற்றில், குழந்தைகளுக்கு கல்வி வழங்கப்படுதல், குழந்தைகளின் பாதுகாப்பு குறித்து விசாரித்தல் மற்றும் மறுஆய்வு செய்தல், குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான புகார்களை விசாரித்தல், குழந்தைகள் பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அவைகளைக் குறித்து கண்காணித்தல் ஆகிய பொறுப்புகள் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி சட்டமானது தமிழகத்தில் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கிறது என்று அவ்வப்போது அரசாங்கத்திடமிருந்தும், அரசு அதிகாரிகளிடமிருந்தும் அறிக்கைகள் மட்டும் வந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் விரைவில் குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்படும் என்று 2012 ஏப்ரல் மாதத்தில் தமிழக அரசு வெளியிட்ட அரசாணை ஒன்று தெரிவிக்கிறது. ஆனால் எதார்த்தத்தில், சட்டம் இயற்றப்பட்டு ஏழு ஆண்டுகள் கடந்து போனபிறகும், இன்றளவும் குழந்தைகளுக்கான ஆணையமே மாநிலத்தில் உருவாக்கப்படவில்லை. உண்மை நிலை அப்படியிருக்கும் போது, குழந்தைகள் மீதான வன்முறைகள் தொடர்பான புகார்களை யாரிடம் கொடுப்பது, யார் அது குறித்து கண்காணிப்பது? சமூக தளத்தில் குழந்தைகளுக்கான குரல் வெளிவருவது மிகவும் அரிதானது. எனவே, அனைத்து தரப்பினரும் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தால்தான், நாட்டின் வருங்கால தூண்களை முதுகெலும்புள்ளவர்களாக நம்மால் பார்க்க முடியும். அதற்கு மாநில அளவில் குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையமும், மாவட்ட அளவில் குழந்தைகள் நீதிமன்றமும் உருவாகிட வழிவகை செய்வதோடு, அவைகள் தொடர்ந்து சிறப்பாக இயங்கிட வழிவகுப்பதும் ஒரு படிக்கல்லாக அமையும்.

ஆணும் பெண்ணும் சமம் தான் என்பது நமது மந்திரம்... ●

# பெட்ரோல் விலை ரூ.50 ஆகக் குறைய வேண்டுமானால் நாடு முழுவதும் பாஜக தோற்றுப் போக வேண்டும் -சிவசேனா எம்.பி

பெட்ரோல், டீசல் விலை ரூ.50 ஆகக் குறைய வேண்டுமானால் நாடு முழுவதும் பாஜக தோற்றுப் போக வேண்டும் என சிவசேனா எம்.பி. சஞ்சய் ரவுத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து உயர்ந்து வந்ததன் எதிரொலியாக பெட்ரோல், டீசல் விலையையும் எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து உயர்த்தி வந்தன. இதனால் பெட்ரோல் லிட்டர் 100 ரூபாயை நாடுமுழுவதும் கடந்தது, டீசலும் லிட்டர் 100 ரூபாய்க்கும் மேல் பல மாநிலங்களில் உயர்ந்தது. இதனால் நடுத்தர மக்கள், சாமானிய மக்கள் பெரிதும் சிரமத்துக்குள்ளாகினர். எதிர்க்கட்சிகளும் மத்திய அரசை கடுமையாக விமர்சிக்கத் தொடங்கின.

இதையடுத்து, பெட்ரோல் மீதான உற்பத்தி வரிசை லிட்டருக்கு 5 ரூபாயும், டீசல் மீதான வரியை லிட்டருக்கு 10 ரூபாயும் குறைத்து மத்திய அரசு அறிவித்தது

அது நடைமுறைக்கு வந்துள்ளது. இந்நிலையில் மகாராஷ்டிரா மாநில சிவசேனா எம்.பி. சஞ்சய் ரவுத் மத்தியில் ஆளும் பாஜக அரசை மிகக் கடுமையாக விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:

``பாஜக அரசுக்கு மக்களைப் பார்த்தால் கிண்டலாக இருக்கிறதா எனத் தெரியவில்லை. பெட்ரோல், டீசல் விலையைக் கடுமையாக உயரச் செய்தது. நாடு முழுவதும் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.100ஐ தாண்டிய நிலையிலும் கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டு. இப்போது தேர்தல் முடிவுகளையும், வரவிருக்கும் தேர்தல்களையும் கருத்தில் கொண்டு பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியைக் குறைத்துள்ளது. தீபாவளியை ஒட்டி மக்களுக்காக நீங்கள் ரூ.25 முதல் ரூ.30 வரை பெட்ரோல், டீசல் விலையைக் குறைத்திருந்தால் நாமும் அரசாங்கம் மக்களுக்காக ஏதோ செய்திருக்கிறது என மகிழ்ந்திருப்போம். ஆனால் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர்தான் பெட்ரோல், டீசல் மீதான கலால் வரி குறைக்கப்பட்டுள்ளது. அப்படியென்றால் பெட்ரோல் விலை ரூ.50க்கு வர வேண்டும் என்றால் நாடு முழுவதும் பாஜக தோற்றுப் போக வேண்டும். அது நிச்சயம் வெகு விரைவில் நடைபெறும்.`` இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

கவிதை

# ஓராண்டு நிறைவில் வர்க்கப்போரின் வெற்றி

- பெரணமல்லூர் சேகரன்

வீரவணக்கம் ஒஓ
வேளாண் புரட்சியில்
தீரமாய் உயிர்நீத்த
விவசாய வீரர்களுக்கு
வீரவணக்கம்

தேசம் முழுவதும்
நேசமுடன் செலுத்தும்
வீரவணக்கம்

ஆளும் அடக்குமுறை அரசின்
மூளும் தாக்குதலில் மாண்டவர்
நீளும் கொடிய காரேற்றிய
ஆளும் அமைச்சர் மகன்
அரங்கேற்றிய படுகொலையில்
ஆகுதியான வேளாண் போராளிகளின்
தியாக வரலாறுக்கு
தேகம் தொழுது வீரவணக்கம்

வரலாறு காணா
நடுங்கும் குளிர் கண்டது
ஒடுங்கவில்லை தேகம்
நடுங்கியது தேசம்

ஒடுக்கியது அதிகார வர்க்கம்
அடக்க இயலாதது உழவர் வர்க்கம்
முடக்க முடியாதது
மூச்செனும் போர் தர்க்கம்
வீச்சாகத் தொடரும் போர் மார்க்கம்

நீத்த உயிர்கள்
காத்த போர்த்தீ
போர்த்திய குளிரை விரட்டியது
சேர்த்த ஒற்றுமை
கூர்த்த மதி கூட்டியது

குளிர் போனது
கூடவே பனியும் போனது
மழை வந்தது
உழைக்கும் மக்கள் முன்னே
வேளாண் காப்பது கண்ணே
என்றானது

மழை போனது
கடும் வெயில் வாட்டியது
கொடுங்கோலுக்கெதிராய்
நெடும்போர் நடத்தத் தயாரானது

மீண்டும் மழை வந்தது
யாண்டும் போர் மேக இருள் சூழ்ந்தது

இப்படியாய் பருவங்கள் மாறின
எப்படியும் வென்றே தீருவது
காற்றும் மழையும் வெயிலும்

குளிரும் மாறி வரினும்
கொரோனா தொற்று
உருமாறி வரினும்
கருவான போர் வளர்ந்து வளர்ந்து
வெற்றிச் சேயாக
ஓராண்டு நிறைந்தது

முந்நூறு நாள் சுமந்தும்
முக்காலும் மானுடம் காக்கும்
வேளாண் சேய் மறுபிறவியெடுக்கும்
வேளாண் விரோதிகளை ஒடுக்கும்

கடந்து வந்த போர்ப்பாதை
ரோஜா மலர்கள் தூவிய
ராஜ பாட்டையல்ல
ராஜாவின் கொடுங்கரங்களால்
அமைந்த முட்பாதை
எல்லைகளில் எழும்பிய
கூர்க்கம்பிகளாலான இரும்புப்பாதை
எடுத்த பெரும்பள்ளங்கள்
கொடிய ஆளும் உள்ளங்கள்

காலிஸ்தான் தீவிரவாதிகள் என்றனர்
போலி விவசாய காவிகளை நுழைத்தனர்
அவர்களாகவே ஏற்றினர்
மதக்கொடியை செங்கோட்டை மதிலில்

தில்லி மாநில அரசின்
குடிநீரை நிறுத்தினர்
கழிவறை வசதிகளை
இழிவாகத் துண்டித்தனர்
பிறர் துன்பத்தில் இன்பங்காணும்
சிறுமதியாளராய்

மண்டை உடையும் வரை
தாக்குங்களென
ஆள்வோரும் அதிகாரிகளும்
அரக்கர்களெனக் கூச்சலிட்டு அரங்கேற்றினர்
காரேற்றிக் கொன்றனர்
கண்ணெதிரே படமாக்கியவரை
துப்பாக்கிச் சூட்டில்
பஸ்பமாக்கினர்

எதையும் தாங்கி நிற்கின்றன
வர்க்கக் கால்கள்
வியப்புடன் நோக்குகின்றன
வானில் கோள்கள்

உலக மாந்தர் ஆதரவு
உள்நாட்டு வேந்தர் எதிர்ப்பு
இருவேறு அணுகுமுறை இருப்பு
கருவாகி உருவாகி பிறப்பு-அது
எருவாகிப் போரிடும் பொறுப்பு
உருவான சட்டங்கள் அறுப்பு
திருவான வேளாண்மை சிறப்பு

சிகரத் தியாகம் உயிரே
நிகரிலாது ஈந்தனர் நேரே

தியாகத் தடத்தில் பயணம்
நியாயப்போர் தொடரும் தருணம்

கண்முன் தியாகம்
வான் நிகர் உயரம்
வீண் போகாது பகரும்

ஓராண்டு நிறைவில் வர்க்கப்போர்
ஒப்பிலா வெற்றி கண்ணில் நேர்

வீரத் தழும்புகள் ஈட்டிய வெற்றி
வேளாண் சட்டங்கள் ரத்து பற்றி

இலட்சியம் காட்டிய வெற்றிப் பாடம் இலக்கினைக்
கொண்டு பயணிக்கும் தடம்

# மாவட்ட மாநாடுகள்

**திண்டுக்கல்**

திண்டுக்கல் மாவட்ட 14ஆம் மாவட்ட மாநாடு 06.11.2021 (சனிக்கிழமை) அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் ஜெ.எஸ். விஜயகுமார் அவர்கள் தலைமை உரையாற்றினார். மாவட்ட இணைச்செயலாளர் ஏ. நாராயணசாமி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்டத் துணைதலைவர் எஸ். குப்புசாமி, வரவேற்புரையாற்றினார்.பொதுச்செயலாளர் ஆ.செல்வம் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் எஸ்.முபாரக் அலி, வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் கே. ராஜேந்திரன் வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர்.

சிஐடியு மாவட்ட செயலாளர் கே.ஆர். கணேசன், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட பொருளாளர், கிருஷ்ணவேணி, தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட செயலாளர் எம்.எல். கேசவன், வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்டத்தலைவர் ஜான் பாஸ்டின் டல்லஸ், மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்க மாநிலத் துணைத்தலைவர் எம்.பி.விவேகானந்தன், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் வி.மணிக்காளை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் ச. முபாரக் அலி, மோட்டார் வாகன பராமரிப்புத்துறை, செயலாளர் ம.பா. விவேகானந்தன், மருத்துவத்துறை, பொருளாளர் - எஸ். குப்புசாமி, ஊரகவளர்ச்சித்துறை துணைத்தலைவர்கள்: ம.சுகந்தி, வருவாய்த்துறை, டி. ராஜமாணிக்கம், நெடுஞ்சாலைத்துறை, எஸ். பிச்சைவேல், கூட்டுறவுத்துறை, டி வல்லவன், பொது சுகாதாரத்துறை, இணைச்செயலாளர்கள்: வி.ஜெயபால், நெடுஞ்சாலைத்துறை, மகாராஜா, வருவாய்த்துறை, கே.மகாலிங்கம், பேரூராட்சி, ராஜாத்தி, சத்துணவுத்துறை தணிக்கையாளர்கள்: என்.சுரேஷ்குமார், பட்டுவளர்ச்சித்துறை, இராமசாமி, மருத்துவத்துறை ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலத்துணைத்தலைவர் இரா. மங்களபாண்டியன் நிறைவுரையாற்றினார்கள்

மாவட்ட இணைச்செயலாளர் இரா. சுகந்தி நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது.

இம்மாநாட்டில் 108 பேர் கலந்து கொண்டனர்

**விழுப்புரம்**

விழுப்புரம் மாவட்ட 13ஆம் மாவட்ட மாநாடு 13.11.2021 (சனிக்கிழமை) அன்று விழுப்புரம் சிஐடியு அலுவலகத்தில் நடைபெற்றது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாநிலச்செயலாளர் இரா.ந. நம்பிராஜன் அவர்களும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியை மாவட்டத் தலைவர் ஜெ. ஜெயசங்கர் அவர்களும் ஏற்றி வைத்தனர். மாவட்ட தலைவர் ஜெ.ஜெயசங்கர் அவர்கள் தலைமை உரையாற்றினார். மாவட்ட இணைசெயலாளர் க. அன்பழகன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார்.

மாநிலச்செயலாளர் தெ. வாசுகி மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் சு.சிவக்குமார், வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் கு. சரவணன், வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். டாம்சா மாநில செயலாளர், ஆ.ஜா.பார்த்திபன், சிஐடியு மாவட்ட செயலாளர் ஆர்.மூர்த்தி, மாநிலத்தணிக்கையாளர் கு. மகாலிங்கம், முன்னாள் மாவட்டத்தலைவர் வி.நாகராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்

*மகளிர் அமர்வு: மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் தி.ஜெயந்தி தலைமையில் நடைப்பெற்றது. மாநில செயலாளர் தெ.வாசுகி, செயலாளர் கி. அபிராமி, உமா, சந்திரா, ஜானகி தேவி ஆகியோர் பேசினர். அகில இந்திய ஜனநாயக மாதர் சங்க மாநில செயலாளர் கீதா சிறப்புரையாற்றினார். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்*

*தலைவர்- கு.சரவணன், ஊரக வளர்ச்சித்துறை, செயலாளர்- சு.சிவக்குமார், வணிகவரித்துறை, பொருளாளர்- க. அன்பழகன், மருத்துவத்துறை துணைத்தலைவர்கள்: ஜி,ஏ.அசோகன், மருத்துவத்துறை, எஸ்.தேசிங்கு, சத்துணவுத்துறை, வீ.நடராஜன், ஊரகவளர்ச்சித்துறை, எம்.எஸ்.ஆதி சங்கரன், கருவூலத்துறை, இணைச்செயலாளர்கள்: எம். சாருமதி, வருவாய்த்துறை, மகேஸ்கரன், நிலஅளவைத்துறை, சிவக்குமார், ஊரகவளர்ச்சித்துறை, காந்திமதி வேளாண்மைத்துறை தணிக்கையாளர்கள்: சீனிவாசன், பொது சுகாதாரம் ரா. சுதாகரன், பேரூராட்சி மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளராக டி.ஜெயந்தி அவர்களும் மற்றும் 6 துணைக்குழு உறுப்பினர்களும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலச் செயலாளர் இரா.ந. நம்பிராஜன் நிறைவுரையாற்றினார்கள் மாவட்ட தலைவர் கு.சரவணன் நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது.*

**நாமக்கல்**

*நாமக்கல் மாவட்ட மாநாடு 14.11.2021 (ஞாயிற்றுக்கிழமை) ஆர்.சி. நடுநிலைப்பள்ளி வளாகத்தில் நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் கு.இராஜேந்திர பிரசாத் தலைமை தாங்கினார். மாவட்ட துணைத்தலைவர் இளவேந்தன் அஞ்சலி திர்மானம் வாசித்தார், மாவட்ட இணைச் செயலாளர் கதிர்வேல் வரவேற்புரையாற்றினார்.ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் கலைச்செல்வன் இம்மாநாட்டை துவக்கிவைத்து உரையாற்றினார். மாவட்ட செயலாளர் இரா.முருகேசன், வேலை அறிக்கையும், பொருளாளர் வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர்.*

*புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்-கு.இராஜேந்திர பிரசாத், ஊரகவளர்ச்சித்துறை, செயலாளர்- இரா. முருகேசன், பொது சுகாதாரம், பொருளாளர்: கு.நடராஜன், கூட்டுறவுத்துறை. துணைத்தலைவர்கள்: வி.இளவேந்தன், பொதுசுகாதாரம், ஆனந்தன், வருவாய்த்துறை, எஸ்.இளங்கோ, மருத்துவத்துறை, நந்தினி, பொதுசுகாதாரம் இணைச்செயலாளர்கள்: நடேசன், சத்துணவு, எஸ்.கதிர்வேல், நெடுஞ்சாலைத்துறை, சங்கர், ஊரகவளர்ச்சி, இளங்கோவன், கால்நடை பராமரிப்புத்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலச்செயலாளர் உ.சண்முகம், நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர், கு. நடராஜன் நன்றியுரையாற்றினார்.*

**திருச்சிராப்பள்ளி**

*திருச்சிராப்பள்ளி 14வது மாவட்ட மாநாடு 14.11.2021 (ஞாயிற்றுக்கிழமை) ஸ்ரீ ஹோட்டல் கூட்ட அரங்கில் நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் முனைவர் கா.பால்பாண்டி தலைமைத்தாங்கினார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாநில துணைத்தலைவர் ஏ. பெரியசாமி அவர்களும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கொடியை மாவட்டத் தலைவர் முனைவர் கா. பால்பாண்டி அவர்களும் ஏற்றி வைத்தனர். மாவட்ட இணைச்செயலாளர் க.சிவசங்கர் அஞ்சலி திர்மானம் வாசித்தார், மாவட்ட துணைத்தலைவர் எம். ஜீவானந்தம் வரவேற்புரையாற்றினார். மாநிலத்துணைத்தலைவர் ஏ.பெரியசாமி துவக்கவுரையாற்றினார். மாவட்ட செயலாளர் பொ. பழனிச்சாமி, வேலை அறிக்கையும், பொருளாளர் ஆர். சுந்தர் ராஜ், வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். தமிழ்நாடு அனைத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் எம்.வி.செந்தமிழ் செல்வன், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் முன்னாள் மாநிலத்தலைவர் எஸ்.சுடலையாண்டி, தமிழ்நாடு அனைத்துதுறை ஓய்வூதியர் கூட்டமைப்பின் எம். சிராஜுதீன், தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எம்.பி.விவேகானந்தன்,*

தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட துணைத்தலைவர் முருகேசன், அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்-முனைவர் கா.பால்பாண்டி, புள்ளியல் மற்றும் பொருளியல் துறை, செயலாளர் - பி, பழனிச்சாமி, காவல்துறை அமைச்சு பணியாளர், பொருளாளர்: ஆர்.சுந்தர்ராஜ், மருத்துவத்துறை. துணைத்தலைவர்கள்: எம். சகாதேவன், மருத்துவத்துறை, எம். ஜீவானந்தம், நெடுஞ்சாலைத்துறை, பி.வெங்கடேசன், வருவாய்த்துறை, க. சிவசங்கர், மருத்துவத்துறை இணைச்செயலாளர்கள்: க.முருகானந்தம், வணிகவரித்துறை, சி.ஆ.பாபு, கருவூலத்துறை, ந.அமுதவள்ளி, தொழிலாளர் நலத்துறை, ஐ. அல்போன்சா, சத்துணவுத்துறை தணிக்கையாளர்கள்: சா.சக்திவேல், நெடுஞ்சாலைத்துறை, எஸ்.டி.சுரேஷ் பிரபு, மருத்துவத்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகளிர் துணைக்குழு அமைப்பாளர்: பா.சத்தியவாணி, சத்துணவுத்துறை, இணைஅமைப்பாளர் ந. மேனகாதேவி தொழிலாளர் நலத்துறை. மகளிர் அமர்வு மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் பி. சத்தியவாணி அவர்களின் தலைமையில் நடைப்பெற்றது. மாநில பொருளாளர் மு.பாஸ்கரன், நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச்செயலாளர் என்.அமுதவள்ளி நன்றியுரையாற்றினார்.

### திருவண்ணாமலை

திருவண்ணாமலை மாவட்ட மாநாடு 14.11.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று ஆண்டாள் சிங்காரவேலு திருமண மண்டபத்தில் நடைப்பெற்றது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாநிலத்லைவர் மு. அன்பரசு அவர்களும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியை மாநிலச்செயலாளர் இரா.ந. நம்பிராஜன் அவர்களும் ஏற்றி வைத்தனர். மாவட்ட தலைவர் சு.பார்த்திபன் அவர்கள் தலைமை உரையாற்றினார். மாவட்ட இணைச்செயலாளர் இரா.மணி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணை தலைவர் ஜெ. ராஜா வரவேற்புரையாற்றினார். மாநிலச்செயலாலளர் இரா.ந. நம்பிராஜன் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் க.பிரபு, வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் பா. வேங்கடவரதன், வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். தமிழ்நாடு ஊரகவளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாநில பொதுச்செயலாளர் ச. பாரி, தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத்தலைவர் அ. அருண்பாட்ஷா, தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் அ. அந்தோணிராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்- சு.பார்த்திபன், வருவாய்த்துறை, செயலாளர்- க,பிரபு, ஊரகவளர்ச்சித்துறை, பொருளாளர் - ஜெ.ராஜா, நிலஅளவைத்துறை துணைத்தலைவர்கள்: கோ. ஸ்ரீதர், வருவாய்த்துறை, க.அண்ணாத்துரை, சத்துணவுத்துறை, மா.பார்வதி, ஊரகவளர்ச்சித்துறை, இரா.மணி, வருவாய்த்துறை இணைச்செயலாளர்கள்: மா.மணி. வேளாண்மைத்துறை, தெ.பி. புனிதா, சுகாதாரத்துறை, கோ.அண்ணாமலை, ஊரகவளர்ச்சித்துறை, அ. சம்பத், சத்துணவுத்துறை தணிக்கையாளர்கள்: இல.பாஸ்கர், வருவாய்த்துறை, கி.சங்கர், ஊரகவளர்ச்சித்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலத்தலைவர் மு. அன்பரசு அவர்கள் நிறைவுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் பரிதிமாற் கலைஞர் நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது.இம்மாநாட்டில் 140 பேர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு

ஈரோடு மாவட்ட 14ஆம் மாவட்ட மாநாடு 14.11.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைப்பெற்றது. மாவட்ட தலைவர் ஏ. ராக்கிமுத்து அவர்கள் தலைமை உரையாற்றினார். ஆர். குமரவேல் அஞ்சலி தீர்மானம் வாசித்தார்.

எஸ். ரமேஷ் வரவேற்புரையாற்றினார். மாநிலத் துணைதலைவர் மு. சீனிவாசன் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் எஸ். விஜயமனோகரன், வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் ஆர்.சுமதி, வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். முன்னாள் மாநிலத்தலைவர் கே. ராஜ்குமார், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநிலத்தலைவர். கு.குமரேசன், வாழ்த்துரை வழங்கினார்கள். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்-ஏ,ராக்கிமுத்து, வருவாய்த்துறை, செயலாளர் எஸ். விஜயமனோகரன், கல்வித்துறை, பொருளாளர், ஆர்.சுமதி, ஐ.டி.ஐ. துணைத்தலைவர்கள் ஆர்.குமரவேல், மாநகராட்சி, எஸ்.செந்தில்நாதன் நெடுஞ்சாலைத்துறை, எஸ்.ரமேஷ், வருவாய்த்துறை, இணைச்செயலாளர்கள் கே,பெருமாள், ஊரகவளர்ச்சித்துறை, டி, திருமுருகன் சாலை ஆய்வாளர், யு. பழனிச்சாமி, சத்துணவுத்துறை தணிக்கையாளர்கள் ஜி. சசிகலா, MRB செவிலியர், கே.சக்திவேல் முருகன், கால்நடை பராமரிப்புத்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநிலச் செயலாளர் தெ.வாசுகி அவர்கள் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் டி.திருமுருகன் நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது. இம்மாநாட்டில் 102 பேர் கலந்து கொண்டனர்.

**திருப்பூர்**

திருப்பூர் 5ஆம் மாவட்ட மாநாடு 20.11.2021 (சனிக்கிழமை) 11.00 மணிக்கு KRC CITY CENTRE ல் நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் ஏ.ராணி தலைமை தாங்கினார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாநில துணைதலைவர் மு.சீனிவாசன் அவர்களும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியை மாவட்டத் தலைவர் ஏ.ராணி அவர்களும் ஏற்றி வைத்தனர். மாவட்ட துணை தலைவர் எம்.எஸ். அன்வருல் ஹக் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். திருப்பூர் தெற்கு வட்டக்கிளைத் தலைவர் மணி பாரதி வரவேற்புரை நல்கினார்.

மாநிலத்துணைத்தலைவர் மு.சீனிவாசன் இம்மாநாட்டை துவக்கிவைத்ததார் மாவட்ட செயலாளர் மா.பாலசுப்ரமணியன் வேலை அறிக்கையும், பொருளாளர் எஸ்.முருகதாஸ் வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். தமிழ்நாடு அனைத்துதுறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் மு. பாலசந்திரமூர்த்தி, தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில செயற்குழு உறுப்பினர் ப.கனகராஜ் வாழ்த்துரை வழங்கினார்கள். மாவட்ட நிர்வாகிகள் தீர்மானங்களை முன்மொழிந்தனர். பிற்பகல் மகளிர் மாநாடு நடைப்பெற்றது. மாவட்டத்தலைவர் ஏ.ராணி தலைமை தாங்கினார். மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் ஏ.ராஜேஸ்வரி அறிக்கை சமர்ப்பித்தார். அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் எஸ்.பவித்ரா தேவி அவர்கள் சிறப்புரையாற்றினார். மாலை 4.30 மணிக்கு மாநாட்டு பேரணி மற்றும் பொது மாநாடு திருப்பூர் நகராட்சி முன்பு நடைப்பெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாநில செயலாளர் அ.நிசார் அகமது சிறப்புரையாற்றினார். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தலைவர்- ஏ.ராணி, பொதுசுகாதாரம், செயலாளர்-எம்.பாலசுப்ரமணியன், நெடுஞ்சாலைத்துறை, பொருளாளர்: எஸ். முருகசாமி, நெடுஞ்சாலைத்துறை துணைத்தலைவர்கள்: எஸ்.முருகதாஸ், வருவாய்த்துறை, எம்.எஸ்.அன்வருல் ஹக், கல்வித்துறை, எம்.பாக்கியம், சத்துணவு, எம். ராமசாமி, வருவாய்த்துறை இணைச்செயலாளர்கள்: ஆர்.ராமன், நெடுஞசாலைத்துறை, எம்.மேகலிங்கம், தொழிற்பயற்சித்துறை,

தா.வைரமுத்து வேளாண்மைத்துறை, ஏ. ராஜேஸ்வரி, சத்துணவு. தணிக்கையாளர்கள்: விவேகானந்தன், பொது சுகாதாரம், எம்.பசுபதி, தொழிற்பயிற்சித்துறை மற்றும் 19 மாவட்ட மகளிர் துணைக்குழு உறுப்பினர்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநில

துணைத்தலைவர் பெரியசாமி, நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச்செயலாளர் ஆர்.ராமன் நன்றியுரையாற்றினார்.

**திருவள்ளூர்**

திருவள்ளூர் 13வது மாவட்ட மாநாடு 27.11.2021 (சனிக்கிழமை) 11.00 மணிக்கு நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் சந்திரசேகரன் தலைமைத் தாங்கினார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாநிலச்செயலாளர் இரா.ந. நம்பிராஜன் அவர்களும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியை மாவட்டத் தலைவர் சந்திரசேகரன் அவர்களும் ஏற்றி வைத்தனர். மாநிலச் செயலாளர் இரா.ந.நம்பிராஜன் துவக்கவுரையாற்றினார். மாவட்ட செயலாளர் இரா.பாண்டுரங்கன், வேலை அறிக்கையும், பொருளாளர் க.வெண்ணிலா வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்- க.திவ்யா, செயலாளர் - இரா.பாண்டுரங்கன், பொருளாளர்: க.வெண்ணிலா துணைத்தலைவர்கள்: எஸ். காந்திமதிநாதன், பா.காத்தவராயன், ஏ. சந்திரசேகரன், ஏ.மணிகண்டன் இணைச்செயலாளர்கள்: மெல்கி ராஜா சிங், மா. சந்திரமோகன், கோவிந்தராஜ், ஏ.சிவா தணிக்கையாளர்கள்: மீரா கண்ணன், தேவ அதிசயம் ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர்: க.வெண்ணிலா மாநில செயலாளர் வாசுகி, நிறைவுரையாற்றினார் பா. காத்தவராயன் நன்றியுரையாற்றினார்.

**செங்கற்பட்டு**

செங்கற்பட்டு முதலாம் மாவட்ட மாநாடு 26.11.2021 (வெள்ளிக்கிழமை) 11.00 மணிக்கு மதுராந்தகத்தில் நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் சி.முகம்மது உசேன் தலைமை தாங்கினார். அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாநிலத்தலைவர் மு.அன்பரசு அவர்களும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியை மாவட்டத் தலைவர் சி.முகம்மது உசேன் அவர்களும் ஏற்றி வைத்தனர். தமிழ்நாடு அனைத்து ஓய்வூதியர் சங்க மாவட்டத்தலைவர் கே.வி.வேதகிரி இம்மாநாட்டை துவக்கிவைத்ததார். மாவட்ட செயலாளர் தாமோதரன் வேலை அறிக்கையும், பொருளாளர் எம்.என்.ஸ்ரீராம் வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் எம்.சீனிவாசன் வாழ்த்துரை வழங்கினார்கள். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்-கே. பூங்குழலி, செயலாளர் - சி.முகம்மது உசேன், பொருளாளர்: வி.விக்டர் சுரேஷ்குமார் துணைத்தலைவர்கள்: எம்.என். ஸ்ரீராம், ஏ.பேபி, ஆர்.கோவிந்தன், டி. கன்னியப்பன் இணைச்செயலாளர்கள்: எம். தாமோதரன், எஸ். புஷ்பலதா, எம்.ராமு, பி. அன்பரசி தணிக்கையாளர்கள்: கே.முத்துராமன், ஏ. சங்கர் ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகளிர் அமர்வு மாவட்டத்தலைவர் தலைமையில் நடைப்பெற்றது. மகளிர் குழு உறுப்பினர் ஏ. பேபி வரவேற்புரையாற்றினார், அமைப்பாளர் பூங்குழலி அறிக்கை சமர்ப்பித்தார். தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி துணைச் செயலாளர் வி.ஆர்.வேம்புலி அம்மாள் சிறப்புரை நிகழ்த்தினார். மாநில தலைவர் மு.அன்பரசு, நிறைவுரையாற்றினார். மதுராந்தகம் வட்டக்கிளை தலைவர் என். பாலாஜி நன்றியுரையாற்றினார்.

**தென்காசி**

தென்காசி முதல் மாவட்ட மாநாடு 27.11.2021 (சனிக்கிழமை) அன்று 10,00 மணியளவில் தென்சாசி மேலகரம் சமுதாய நலக்கூடத்தில் தோழர் R.M.S அரங்கத்தில் நடைப்பெற்றது. மாவட்ட தலைவர் மு. திருமலைமுருகன் அவர்கள் தலைமை உரையாற்றினார். மாவட்ட இணைச்செயலாளர் இரா.ராஜ் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்டத்துணைத்தலைவர் செ.மைதீன் பட்டாணி அவர்கள் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத்தலைவர் மு. சலீம் முகமது மீரான் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் க.துரைசிங், வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் சு.வேல்ராஜன், வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்ட செயலாளர் எம்.வேல்முருகன், தமிழ்நாடு ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணி மாநில செயற்குழு உறுப்பினர் பி.ராஜ்குமார், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில சட்ட செயலாளர் க.பிச்சைக்கணி, தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் எம்.தேவி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மகளிர் மாநாடு: மாவட்ட துணை தலைவர் செ.கணபதி அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. தென்காசி வட்டக்கிளை தலைவர் எம்.செல்வி வரவேற்புரையாற்றினார். அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கே. மேனகா சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க எம்.செல்வி நன்றியுரை கூறினார். மாநிலச் செயலாளர் சி. எஸ்.கிறிஸ்டோபர் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணை செயலாளர் பெ.க. மாடசாமி நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது.

**இராமநாதபுரம்**

இராமநாதபுரம் மாவட்ட 14ஆம் மாவட்ட மாநாடு 27.11.2021 (சனிக்கிழமை) அன்று நடைப்பெற்றது. மாவட்ட தலைவர் க. சண்முகநாததுரை அவர்கள் தலைமை உரையாற்றினார். சா.பவுன்ராஜ் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். ம.முருகேஸ்வரி அவர்கள் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத்தலைவர் எம்.முனியசாமி மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் பெ.சேகர் வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் எச்.அப்துல் நஜிமுதீன், வரவு-செலவு அறிக்கையையும் சமர்ப்பித்தனர். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்-ம. முருகேஸ்வரி, சமூக நலத்துறை, செயலாளர் - கே.சேகர், வருவாய்த்துறை, பொருளாளர் - எச்.அப்துலூ நஜிமுதீன், பொதுப்பணித்துறை துணைத்தலைவர்கள்: சா.பவுல்ராஜ், நெடுஞ்சாலைத்துறை, செந்தில்வேல் முருகன், வருவாய்த்துறை, கு.முத்துராமலிங்கம், பேரூராட்சி, பா. ராஜமூர்த்தி, கூட்டுறவுத்துறை இணைச்செயலாளர்கள்: கே.பாலமுருகன், கல்வித்துறை, பாண்டி, நெடுஞ்சாலைத்துறை, சதீஷ்குமார், கருவூலத்துறை, போ. முனீஸ்வரன், கல்வித்துறை மாநிலத் துணைதலைவர் என். வெங்கடேஷ் நிறைவுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் திருமுருகன் நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது. மாநாட்டில் 100க்கும் அதிகமானோர் கலந்துக் கொண்டனர்.

**சிவகங்கை**

சிவகங்கை மாவட்ட 14ஆம் மாவட்ட மாநாடு 02.12.2021 (வியாழக்கிழமை) அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடத்தில் கே.ஆர்.சங்கரன் நினைவரங்கத்தில் நடைப்பெற்றது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை பொதுச்செயலாளர் ஆ. செல்வம் அவர்களும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியை மாநிலதுணைத்தலைவர் இரா. மங்களபாண்டியன் அவர்களும் ஏற்றி வைத்தனர். மாவட்ட தலைவர் டி.வினோத் ராஜா அவர்கள் தலைமை உரையாற்றினார். சிவகங்கை வட்டக்கிளைத் தலைவர் சி. முத்தையா அஞ்சலி தீர்மானம் வாசித்தார். திருப்புவனம் வட்டக்கிளைத் தலைவர் ஆர். மாரி வரவேற்புரையாற்றினார். மாநில துணைத்தலைவர் இரா. மங்களபாண்டியன் மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். வேலை அறிக்கையையும், வரவு-செலவு அறிக்கையும் மாவட்ட பொருளாளர் பி. பாண்டி அறிக்கை சமர்ப்பித்தனர். சிஐடியு மாவட்ட செயலாளர் ஏ. சேதுராமன், தமிழ்நாடு ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத்தலைவர் ஆ.தாமஸ் அமலநாதன், இகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர் சங்க மதுரை கோட்ட இணைச்செயலாளர் எஸ். நாகராஜன் தமிழ்நாடு புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில பொதுச்செயலாளர் பி. கண்ணதாசன். தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத்தலைவர் கா.முத்துக்குமார் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை சங்க மாநில துணைத்தலைவர் ஆ.மூலலிங்கம்,

ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநிலத்துணைதலைவர் ஏ.பெரியசாமி சிறப்புரையாற்றினார்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தலைவர்-கோ.கண்ணதாசன், புள்ளியியல்துறை, செயலாளர்- பி.பாண்டி, சத்துணவுத்துறை, பொருளாளர்- ஆர்.மாரி, நெடுஞ்சாலைத்துறை. துணைத்தலைவர்கள்: மு.மூவேந்தன், மருத்துவத்துறை, காளிதாஸ், கால்நடைத்துறை, மூகாம்பிகை, கூட்டுறவுத்துறை, கா.முத்துக்குமார், சத்துணவுத்துறை. இணைச்செயலாளர்கள்: டி. வினோத் ராஜா, கூட்டுறவுத்துறை, ராமமூர்த்தி, வேவாய்ப்புத்துறை, செந்தில்வேல், ஊரகவளர்ச்சித்துறை, முத்துராஜ், சமூகநலத்துறை, தணிக்கையாளர்கள்: முத்தையா, நெடுஞ்சாலைத்துறை, சீமைச்சாமி, சத்துணவுத்துறை மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளராக மிக்கேல் அவர்களும் மற்றும் 3 துணைக்குழு உறுப்பினர்களும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். பொதுச்செயலாளர் ஆ.செல்வம் அவர்கள் நிறைவுரையாற்றினார். சிவகங்கை மாவட்ட துணைத்தலைவர் மு. மூவேந்தன் நன்றியுரை கூற மாநாடு சிறப்புடன் நிறைவுற்றது.

**அரியலூர்**

அரியலூர் மாவட்ட மாநாடு 02.12.2021 (ஞாயிற்குக்கிழமை) மாலை 5,30 மணிக்கு நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் ஜி. பஞ்சாபகேசன் தலைமைத்தாங்கினார். மாவட்ட இணை செயலாளர் ஜெ. மகேந்திரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணை செயலாளர் எஸ். சங்கீதா வரவேற்புரையாற்றினார். கருவூல கணக்குத்துறையின் மாநில தலைவர் பி. துரைவேந்தன் மாநாட்டை துவக்கிவைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் எம். கே. முத்து சார்பில் மாவட்ட துணைத்தலைவர் என்.வேல்முருகன் வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் பி. காமராஜ், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் பாக்கியம் விக்டோரியா, மாவட்ட செயலாளர் செந்தில்குமார், ஊரகவளர்ச்சித்துறை சார்பில் மாவட்ட செயலாளர் பழனிவேல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் - பஞ்சாபகேசன், செயலாளர் - என். வேல்முருகன், பொருளாளர்: பி.காமராஜ் துணைத்தலைவர்கள்: எம்.கே.முத்து, பி. துரைவேந்தன், பாக்கியம் விக்டோரியா, பைரவன் மாவட்ட இணைச்செயலாளர்கள்: சட்டநாதன், செந்தில்ராஜன், எஸ். சங்கீதா, சுரேஷ்கண்ணா தணிக்கையாளர்கள்: எஸ். சீனியப்பா, கூட்டுறவுத்துறை, சாலை ரவீந்திரன், கருவூலத்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநில துணைத்தலைவர் ஏ.பெரியசாமி நிறைவுரையாற்றினார். அரியலுhர் வட்ட இணை செயலாளர் நன்றி நன்றியுரையாற்றினார்.

**மதுரை**

மதுரை மாவட்ட 14ஆம் மாநாடு 14.11.2021 (ஞாயிற்குக்கிழமை) 10.00 மணிக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கட்டிடம், தோழர் வீ. தர்மர் நினைவரங்கத்தல் நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் ஜெ. மூர்த்தி தலைமைத்தாங்கினார். மாவட்ட இணை செயலாளர் ஜெ. மகேந்திரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணை செயலாளர் பெ. சந்திரப்பாண்டி வரவேற்புரையாற்றினார். மாநிலத்துணை தலைவர் இரா. மங்களபாண்டியன் மாநாட்டை துவக்கிவைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் க. நீதிராஜா வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் மு. ராம்தாஸ், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். சிஐடியு மாவட்ட தலைவர் மா. கணேசன், டிஎன்பிடிஎப் மாநில செயற்குழு உறுப்பினர் சக்திவேல், டிஎன்பிஜிடிஏ மாவட்ட செயலாளர் கார்த்திகேயன் டிஎன்ஜிபிஏ மாவட்ட தலைவர் குரு தமிழரசு, ஜாக்டோ ஜியோ மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மூ. சந்திரன், மூட்டா பொருளாளர் ஏ.டி. செந்தாமரை கண்ணன், வாழ்த்துரை வழங்கினார்கள். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

தலைவர்- ஜெ.மூர்த்தி, கருவூலத்துறை, செயலாளர்- க.நீதிராஜா, மருத்துவத்துறை, பொருளாளர்: மு.ராம்தாஸ், தியாகராஜர் பொறியியல் கல்லுhரி, துணைத்தலைவர்கள்: பெ. சந்திரப்பாண்டி, சத்துணவுத்துறை, ஜெ. மகேந்திரன், கல்வித்துறை, தூ.முருகன், மருந்தாளுநர், த.மனோகரன், நெடுஞ்சாரைத்துறை மாவட்ட இணைச்செயலாளர்கள்: சி, பெரியக்கருப்பன், ஊரகவளர்ச்சித்துறை, ஆ.அமுதா, சத்துணவுத்துறை, க.சந்திரபோஸ், கூட்டுறவுத்துறை, ஆ.பரமசிவன், மருத்துவத்துறை தணிக்கையாளர்கள்: எஸ். சீனியப்பா, கூட்டுறவுத்துறை, சாலை ரவீந்திரன், கருவூலத்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகளிர் அமர்வு மாவட்டத்தலைவர் ஜெ. மூர்த்தி தலைமையில் நடைப்பெற்றது. மாவட்டமகளிர் குழு உறுப்பினர் ஆ.தமிழ்செல்வி வரவேற்புரையாற்றினார், அமைப்பாளர் ஆ, அமுதா அறிக்கை சமர்ப்பித்தார். பொதுசெயலாளர் ஆ. செல்வம், அகில இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் பி.சுகந்தி சிறப்புரை நிகழ்த்தினார்.

பொதுச் செயலாளர் ஆ. செல்வம் நிறைவுரையாற்றினார். மாவட்டத்துணைதலைவர் தூ.முருகன் நன்றியுரையாற்றினார்.

**நாகப்பட்டினம்**

நாகப்பட்டினம் மாவட்ட 14ஆம் மாநாடு 13.11.2021 (சனிக்கிழமை) 10.00 மணிக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கூட்டரங்கத்தில் நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் பா. ராணி தலைமைத்தாங்கினார். மாவட்ட இணை செயலாளர் ஜெ. மகேந்திரன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். நாகை வட்ட செயலாளர் ஏ அற்புதராஜ் ரூஸ்வெல்ட் வரவேற்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் மு. பாஸ்கரன் மாநாட்டை துவக்கிவைத்து உரையாற்றினார்.

மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் ப. அந்துவன்சேரல், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். சிறப்புரை: கீழ்வேளூர், சட்டமன்ற உறுப்பினர் தோழர். வி.பி. நாகைமாலி, நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் தோழர், ஆளூர் ஷாநவாஸ், மாநிலச் செயலாளர் உ.சண்முகம் கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாநிலத்தலைவர், எம்.சௌந்ர்ராஜன், நகராட்சி ஆணையரக அனைத்து ஊழியர் சங்க மாநிலத்தலைவர், கி. இரகுராமன், நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர், சு. சிவக்குமார், அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட செயலாளர் சொ. கிருஷ்ணமூர்த்தி, இந்திய தொழிற்சங்க மைய மாவட்ட செயலாளர், கே. தங்கமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்- பா. ராணி, செயலாளர்- அ.தி. அன்பழகன், உணவு பாதுகாப்பு அலுவலர், பொருளாளர்: ப.அந்துவன் சேரல் துணைத்தலைவர்கள்: கே. ராஜு, சத்துணவு அமைப்பாளர், எஸ். ஆர்.பாஸ்கரன், வட்டார வளர்ச்சி அலுவலர், எஸ்.அருளேந்திரன், சத்துணவு அமைப்பாளர், எம்.நடராஜன், மருந்தாளுநர் மாவட்ட இணைச்செயலாளர்கள்: ஜெ.ஜம்ருத்நிஷா, ஊரக வளர்ச்சித்துறை, உதயகுமார், நெடுஞ்சாலைத்துறை, எம். மேகநாதன், வேளாண்மை துறை, எஸ். துர்காம்பிகா, சத்துணவு அமைப்பாளர். மாநில செயற்குழு உறுப்பினர் அ. அற்புதராஜ் ரூஸ்வெல்ட், புள்ளியியல் அலுவலர், மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகளிர் மாநாடு தோழர் முனைவர் தீபா, மாநில பொருளாளர் (DYFI) கருத்துரை வழங்கினார்கள்

மாநிலத்தலைவர் மு.அன்பரசு நிறைவுரையாற்றினார். மாவட்டத்துணைதலைவர் துh. முருகன் நன்றியுரையாற்றினார்.

**நாமக்கல்**

நாமக்கல் மாவட்ட மாநாடு 14.11.2021 நாமக்கல்லில் RC நடுநிலைப்பள்ளி வளாகத்தில் (ஞாயிற்குக்கிழமை) நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் கு.இராஜேந்திரபிரசாத்

தலைமைத்தாங்கினார். மாவட்ட துணைத் தலைவர் வி. இளவேந்தன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணை செயலாளர் எஸ். கதிர்வேல் வரவேற்புரையாற்றினார்.

ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டத் தலைவர் கலைச்செல்வன் மாநாட்டை துவக்கிவைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் இரா.முருகேசன் வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்- கு.இராஜேந்திர பிரசாத், ஊரகவளர்ச்சித்துறை, செயலாளர்-இரா. முருகேசன், பொதுசுகாதாரத்துறை, பொருளாளர்: கு.நடராஜன், கூட்டுறவுத்துறை துணைத்தலைவர்கள்: வி.இளவேந்தன், பொது சுகாதாரத்துறை, ஆனந்தன், வருவாய்த்துறை, இளங்கோஇ மருத்துவத்துறை, நந்தினி, பொது சுகாதாரத்துறை மாவட்ட இணைச்செயலாளர்கள்: நடேசன், சத்துணவுத்துறை, எஸ்.கதிர்வேல், நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர், சங்கர் ஊரகவளர்ச்சித்துறை, இளங்கோவன், கால்நடை பராமரிப்புத்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாநில செயலாளர் உ. சண்முகம் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் கு.நடராஜன் நன்றியுரையாற்றினார்.

**காஞ்சீபுரம்**

காஞ்சீபுரம் மாவட்ட 13ஆம் மாநாடு 27.11.2021 (சனிக்கிழமை) 10.00 மணிக்கு KMK சிவகாமி திருமண மண்டபத்தில் தோழர் தே. லட்சுமணன் நினைவரங்கத்தல் நடைப்பெற்றது, மாவட்டத் தலைவர் வெ.லெனின் தலைமைத்தாங்கினார். மாவட்ட இணை செயலாளர் சீதா சீனிவாசன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணை செயலாளர் எம். ஆர். திலகவதி ராமு வரவேற்புரையாற்றினார்.

மாநில செயலாளர் தெ.வாசுகி மாநாட்டை துவக்கிவைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் துரை.மருதன் வேலை அறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் வே.குமார், வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தனர். TNGPA மாவட்ட இணை செயலாளர், கு.வெங்கடகுரு, சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் வி,ஏ சுந்தரவடிவேலு, TAMS மாவட்ட செயலாளர் டி.சேகர், TNPTF மாவட்ட செயலாளர் கே. கதிரவன், TNRDOA கி.மாணிக்கவேலு, TNROA மாவட்ட செயலாளர் கே.ராஜ்குமார், வணிகவரிப் பணியாளர் சங்க மாநில செயலாளர், எஸ். பாபு, கால்நடை ஆய்வாளர் சங்க மாநிலத்தலைவர், ஏஎஸ். சண்முகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.தமிழ்நாடு அனைத்துதுறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர்ஓய் சீத்தாராமன் சிறப்புரைியாற்றினார். புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்-ஜெ.மூர்த்தி, கருவூலத்துறை, செயலாளர்-க.நீதிராஜா, மருத்துவத்துறை, பொருளாளர்: மு.ராம்தாஸ், தியாகராஜர் பொறியியல் கல்லுhரி, துணைத்தலைவர்கள்: பெ.சந்திரப்பாண்டி, சத்துணவுத்துறை, ஜெ.மகேந்திரன், கல்வித்துறை, துh.முருகன், மருந்தாளுநர், த. மனோகரன், நெடுஞ்சாரைத்துறை மாவட்ட இணைச்செயலாளர்கள்: சி.பெரியக்கருப்பன், ஊரகவளர்ச்சித்துறை, ஆ.அமுதா, சத்துணவுத்துறை, க.சந்திரபோஸ், கூட்டுறவுத்துறை, ஆ.பரமசிவன், மருத்துவத்துறை தணிக்கையாளர்கள்: எஸ். சீனியப்பா, கூட்டுறவுத்துறை, சாலை ரவீந்திரன், கருவூலத்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மகளிர் அமர்வு மாவட்டத்தலைவர் வெ. லெனின் அவர்கள் தலைமையில் நடைப்பெற்றது. மாவட்ட மகளிர் குழு உறுப்பினர் பி.கௌதமி வரவேற்புரையாற்றினார், அமைப்பாளர் எம். ஆர்.திலகவதி அறிக்கை சமர்ப்பித்தார். CITU தமிழக மாநில பொருளாளர் மாலதி சிட்டிபாபு பி.சுக்ந்தி கருத்துரை நிகழ்த்தினார். மகளிர் துணைக்குழு உறுப்பிர் கே.பூங்கொடி நன்றி கூறினார்.

மாநில பொருளாளர் மு.பாஸ்கரன் நிறைவுரையாற்றினார். குன்றத்துhர் வட்டக்கிளை செயலாளர் நன்றியுரையாற்றினார். ●



# தோழர் நன்மாறன் மறைவு நல் மைந்தனை இழந்தது மதுரை

க.சுவாமிநாதன்

எளிமை, நேர்மை, அர்ப்பணிப்பு, மக்கள் நேசம் - இத்தகைய பண்புகளை ஒரே வரியில் செல்வதானால் "நன்மாறன்" என்று சொல்லி விடலாம். இராமலிங்கம் அவர் இயற்பெயர். மக்களும் மதுரையும் இயக்கமும் தந்த பெயர் நன்மாறன்.

அவரும் நானும் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நள்ளிரவில் குமுளியில் அரசு பேருந்து ஏறினபோது அவரது சட்டமன்ற உறுப்பினர் அடையாள அட்டையை பார்த்த நடத்துநர் நம்பாமல் அதை திருப்பி திருப்பி பார்த்துக் கொண்டே இருந்தார்.

★"இந்த காலத்தில் எந்த எம்.எல். ஏ சார் பஸ்ஸில் வருகிறார்"★ என்று சொல்லி விட்டு பெரிய கும்பிடு போட்டு நகர்ந்தார்.

★ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டிற்கு★ அருகில்தான் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது குடியிருந்தார். ஒரே அறை... அதன் ஓரம் சீலை மறைக்கப்பட்டு சமையலறையாக இருக்கும். ஒரு கட்டில் ஒன்று இந்த ஓரத்தில் கிடக்கும். ★"தவம்"★ என்பது துறவிகளுக்கான வார்த்தை என்றாலும் எந்த துறவிகள் இப்படி இருக்கிறார்கள்? உலகமயம், நுகர்வியம், பணபல அரசியல்... இவற்றுக்கு மத்தியில் இப்படி வாழ்ந்ததை விட பெரிய "தவம்" ஏது?

எல்லிஸ் நகர் கட்சி அலுவலகத்தில் கூட்டங்கள் முடிந்தவுடன் ★யாராவது ஒரு தோழரின் இரு சக்கர வாகனத்தில்★ பின்னால் அமர்ந்து பயணித்த காட்சி. கட்சி கொடுத்த ★டி. வி.எஸ் 50 வாகனத்திலேயே★ மதுரை மாநகரின் மடிப்பு கலையா வெளி, சித்திரை, ஆவணி மூல வீதிகளில் அவர் வலம் வந்தது அரசியல் கலாச்சாரத்தின் அழகு.

"எல்லோரும் நல்லவரே" என அவர் பழகுவார். எல்லோருக்கும் நல்லவராக அவரும் இருந்தார். ஆனாலும் அரசியல் எதிரிகளின் வன்முறைக்கு ஆளானதும் உண்டு.

மீனாட்சி அம்மன் கோவில் ஆடி வீதிகளின் சொற்பொழிவுகளில் அவர் அமர்ந்திருப்பார்.

மதுரை தெருக்களின் வரலாறை சுவையாக சொல்வார்.

அவர் சட்ட மன்ற உறுப்பினர் நிதியில் இருந்து மாரியம்மன் தெப்பக் குளத்தில் அங்கப் பிரதட்சணம் செய்ய பாதை செம்மை செய்து கொடுத்தார். கம்யூனிஸ்டுகள் கடவுள் வழிபாட்டை ஊக்குவிக்கலாமா? என்ற விமர்சனம் வந்தபோது உருள்பவர் எங்கள் உழைப்பாளி தோழர் அல்லவா? கல்லும் மண்ணும் குத்தாமல் உருளட்டுமே! என்று எல்லோரையும் நெகிழ செய்தார். வறட்டுத்தனம் என்பதே அவரிடம் கிடையாது. எப்போதும் ஈரம்...ஈரம்... ஈரம்... இதுதான் அவரது நெஞ்சம்.

ஆனால் தத்துவ விசாரங்களில் சமரசம் செய்ய மாட்டார். மக்கள் பிரச்சினைகளில் முன் நிற்பார். மக்கள் மொழியில் கனமான விசயங்களை உரையாடுவார். இராமநாதபுரத்தில் 1986 இல் ஒரு பொதுக் கூட்டத்தில் பேச வந்திருந்தார். கையில் குளோப் (Globe) தீப்பெட்டியை வைத்துக் கொண்டு உலக அரசியலை எளிமையாக பேசினார்.

1989 இல் நெல்சன் மாண்டேலா விடுதலையை கொண்டாட மதுரை மாநகர வீதிகளில் நடைபெற்ற மாபெரும் பேரணியின் இறுதியில் கட்டபொம்மன் சிலை அருகே அவர் ஆற்றிய எழுச்சி மிக்க உரையின் ஒவ்வொரு வரிக்கும் கரவொலி. சர்வதேச நிகழ்வு ஒன்றை அவர் சாமானிய மக்களின் இதயத்தோடு இணைத்த

பாங்கு வியக்க வைத்தது. இன்சூரன்ஸ் தனியார்மயத்தை எதிர்த்து அவர் நிறைய வீதிமுனைக் கூட்டங்களில் பேசி இருக்கிறார். பெத்தானியாபுரம், ஜீவா நகர், புதூர் பேருந்து நிலையம், கீழ மாசி வீதி, தந்தி அலுவலகம், தத்தனேரி... இப்படி எத்தனை இடங்கள்! தென் மண்டல இன்சூரன்ஸ் ஊழியர் கூட்டமைப்பு மாநாடு மதுரையில் நடைபெற்றபோது 2008 இல் தமுக்கம் அருகே காவல் துறை கெடுபிடிகளை மீறி பேரணியை துவக்கி வைத்தார்.

குறுகிய அடையாளங்கள் கடந்த சிந்தனை, உணர்வு, செயல்பாடுகளுக்கு அவர் உதாரணம். உத்தப்புரம் தீண்டாமைச் சுவர் பற்றிய திரு கார்த்திகேயன் அவர்களின் இந்து ஆங்கில நாளிதழ் செய்தியை சட்ட மன்ற கூட்டத் தொடரில் 2008 இல் முதன் முதலாக அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் கவனத்திற்கு கொண்டு சென்றவர். "என்ன நன்மாறன், பெர்லின் சுவர் மாதிரி சொல்றீங்க" என்று கலைஞர் காட்டிய உடனடி ரியாக்சன்தான் அடுத்தடுத்த நகர்வுகளின் துவக்கம்.

மேடைக் கலைவாணர் என்ற வார்த்தைக்கு பொருத்தமானவர். மேல மாசி வீதி - வடக்கு மாசி வீதி சந்திப்பில் எத்தனை முறை அவரின் குரல் மக்களை ஈர்த்திருக்கிறது! குன்றக்குடி பெரிய அடிகளார், தமிழருவி மணியன், மாயாண்டி பாரதி, விடுதலை விரும்பி... இப்படிப்பட்ட பெரும் ஆளுமைகள் மத்தியில் ஒரே மேடையில் பேச நன்மாறன் எழுந்தால் கூட்டம் ஆரவாரிக்கும். பட்டிமன்றத்தின் போக்கை அவர் பேச்சு மாற்றிவிடும். இரவு 2 மணியைக் கடந்து ஆயிரக்கணக்கில் மக்கள் உட்கார்ந்திருப்பார்கள். அவரது பயணம் நீண்டது. நெடியது. வாலிபர் சங்க தலைவராக, இலக்கிய உரை வீச்சாளராக, மார்க்சிஸ்ட் தலைவராக, மக்கள் பிரதிநிதியாக பன்முகப் பரிமாணத்தில் சிறந்த பங்களிப்பை நல்கியவர்.


நன்மாறன், நீங்கள் மதுரையின் அடையாளம். கம்யூனிச பண்புகளின் அடையாளம். அரசியல் விழுமியங்களின் அடையாளம். என்றும் உங்களை நாம் மறவோம்.

கண்கள் கசிய வழி அனுப்புகிறோம். ●

கட்டுரை

# தோல்விகள் எல்லாம் வீழ்ச்சிகள் அல்ல

**விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன் கற்றுக் கொடுத்த பாடம்**



தாமஸ் ஆல்வா எடிசன் 1847ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ஆம் நாள் பிறந்தார். கற்க படிப்பினையே பாடம் என்கிற வரலாற்று வெற்றி முழக்கத்திற்கு சொந்தக்காரர் தாமஸ் ஆல்வா எடிசன். ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளால் நிறைந்த அவரது வாழ்க்கை முழுவதும் தோல்விகளும் பாதிப்புகளுமே அவரை அதிகமாக வரவேற்றிருக்கின்றன. நஷ்டம் ஏற்படும் போதெல்லாம், “பின்னடைவுகளில் இருந்து மீள ஒரு புது வழியைத் தெரிந்து கொண்டது எனக்கு லாபமே” என்று நம்பிக்கை வார்த்தைகளோடு உலகெல்லாம் உற்சாக விதைகளைத் தூவியிருக்கிறார் எடிசன்.

1914 ஆம் வருடம் அவரது சோதனைச் சாலையில் மிகப்பெரிய தீ விபத்து ஏற்பட்டு விட, நண்பர்கள் எல்லாம்வழக்கமான சோக கீதங்களைப் பாட, எடிசன் சொன்னாராம், "தீ எவ்வளவு அழகாக எரிகிறது பாருங்கள்! ரசாயனப் பொருட்களைத் தவறான விகிதத்தில் கலந்து விட்டேன் போல.. இந்தத் தோல்வி எனக்கு எவ்வளவு பெரிய படிப்பினை! " என்று பூரித்துப் போனாராம்.

தனது 81- வது வயதில் 1931ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18 ஆம் நாள் மரணமடையும் வரை 1093 கண்டுபிடிப்புகளை எடிசன் பதிவு செய்ய முடிந்ததற்கு, தோல்விகளை வீழ்ச்சியாகக் கருதாத அவரது இந்த மனப்பான்மையே காரணம். ●

கட்டுரை

# உலக நாடுகளை எச்சரிக்கும் ஐபிசிசி அறிக்கை



பருவநிலை மாற்றம் பற்றிய உலக நாடுகளுக்கிடையேயான குழு (ஐபிசிசி) அதிகரித்து வரும் பருவநிலை மாற்றம் மிகப் பெரிய பேரழிவிற்கு இட்டுச் செல்லும் என உலக நாடுகளை எச்சரித்திருக்கிறது.

உலக சராசரி வெப்பநிலை தொழிற்புரட்சிக்கு முந்தைய காலத்தைவிட 1.5 டிகிரி சென்டிகிரேட் கூடுதலாக ஆனால் ஏற்படும் விளைவுகள் குறித்த சிறப்பு அறிக்கை ஒன்றினை மூன்று ஆண்டுகளுக்கு முன் ஐபிசிசி வெளியிட்டது. பூமியின் சூழலைக் கணக்கில் கொண்டு அதிவிரைவாகத் தயாரிக்கப்பட்ட அந்த அறிக்கை பருவநிலை மாற்றம் பற்றி உலக அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை வலுப்படுத்துவது குறித்து விரிவாகப் பேசியது. நாடுகளின் நீடித்த வளர்ச்சி அல்லது ஏழ்மையை ஒழிப்பது பற்றிய நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட வேண்டுமென்று

அது உபதேசிக்கவில்லை. மாறாக, அந்த சட்டகத்திற்குள் உலகம் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள் மையப்புள்ளி ஆகவேண்டும் என்ற தன் கவலையை அந்த அறிக்கை வெளிப்படுத்தியது.

2015-ம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற பருவநிலை மாற்றம் குறித்த உலக நாடுகளின் மாநாடு 1.5 டிகிரி உயர்வுக்குள் உலக சராசரி வெப்பநிலையை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அதற்கு முன்னதாக அந்த வரையறை

2 டிகிரி சென்டிகிரேடாக வைக்கப்பட்டிருந்தது. பேரிடர் நிகழ்வுகள் அதிகரித்தது, சிறிய தீவுகளின் இருப்பே கேள்விக்குறியானது ஆகிய உடனடி ஆபத்துகளைக் கணக்கில் கொண்டே அந்த வரையறை மாற்றியமைக்கப்பட்டது. பல நாடுகள் அந்த முடிவை உற்சாகத்துடன் வரவேற்றன.

தினசரி வெப்பநிலைகள் மிக மிக அதிகமாக மாறிக்கொண்டிருப்பதைப் பார்த்து வருபவர்களுக்கு 1.5 டிகிரிக்கும் 2 டிகிரிக்கும் இடையே உள்ள வித்தியாசம் அற்பமாகத் தோன்றலாம். இந்தக் கடுகளவு வித்தியாசம் குறித்து இவ்வளவு அலட்டிக் கொள்ள வேண்டுமா என்றுகூடத் தோன்றலாம். ஆனால், உலகின் சராசரி வெப்பநிலை குறித்துப் பேசுகிறோம் என்பதை நாம் கவனிக்கத் தவறக் கூடாது. பூமியின் பல்வேறு பிரதேசங்கள் பல்வேறு விகிதங்களில் கூடுதல் வெப்பநிலையைச் சந்தித்து வருகின்றன.

உதாரணமாக, உலக சராசரியை விடப் பன்மடங்கு கூடுதலான வெப்பநிலையை ஆர்க்டிக் பிரதேசம் ஏற்கனவே சந்தித்து வருகிறது.

உலக சராசரி வெப்பநிலை ஏற்கனவே 1 டிகிரி வெப்பநிலையைத் தாண்டிவிட்டது. பருவநிலை மாற்றத்திற்கெதிரான உறுதியான, தீவிரமான நடவடிக்கைகளை உலக நாடுகள் எடுக்காவிடின் 2040-க்குள் 1.5 டிகிரி இலக்கைக் கடந்துவிடும் ஆபத்து நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. நடவடிக்கை எடுப்பதற்கான காலக்கெடு மிகவும் குறைவாகவே இருக்கிறது.

வெப்பநிலையில் 0.5 டிகிரி கூடுதல் என்பது ஏற்கனவே அழிந்துகொண்டிருக்கும் பல உயிரினங்களுக்கு வாழ்வா, சாவா என்ற பிரச்சனை. கூடுதல் வெப்பநிலையில் அவை சந்திக்க வேண்டியிருப்பது அழிவைத் தவிர வேறில்லை. 2 டிகிரி கூடுதல் வெப்பநிலையோடு ஒப்பிடும்போது 1.5 டிகிரி வெப்பநிலையின் கீழ் கடல்நீர் அமிலமாதல் குறையும். கடல் சார்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகள், கடல்வாழ் இனங்கள் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும். புயல்களின் வீரியம் குறையும்.. அவை தோன்றும் இடைவெளிகள் குறையும்... வறட்சிகளின் தீவிரத்தன்மை மட்டுப்படும்.. வெப்பஅலைகள் பயிர்களின் மீது ஏற்படுத்தும் தாக்கமும் கோடை காலங்களில் ஐஸ் இல்லாத ஆர்க்டிக் உருவாவதற்கான வாய்ப்பும் குறையும். 0.5 டிகிரி வித்தியாசத்திற்கு இவ்வளவு மவுசா என நம்மை மலைக்க வைக்கும்.

2 டிகிரி வெப்பநிலை கூடுதலான உலகில் 2100-க்குள் கடல் மட்டங்கள் சுமார் 50 செமீ. வரை உயரும் என அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது 1.5 டிகிரி வெப்பநிலை கூடுதலான உலகைவிட 10 செ.மீ. அதிகம். 2100-க்குப் பிறகு 2 டிகிரி வெப்பநிலை உலகில் கடல் மட்டம் உயர்வது மிகமிக அதிகமாக இருக்கும். உணவுப் பாதுகாப்பு, உடல்நலன், சுத்தமான நீர், மனிதர்களுக்குப் பாதுகாப்பு, வாழ்நிலைகள், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துகள் 2 டிகிரி உலகில் மேலும் மோசமாக இருக்கும். பூமி சூடேறுவதால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள ஏழை எளிய மக்கள்தான் மிக அதிகமாக பாதிக்கப்பட்ட மக்களாக இருப்பார்கள். கிரீன்லாந்து ஐஸ் உருகிவிடும்.. அன்டார்டிக் பனிமலைகள் உருகி காணாமல் போய்விடும்.. இதன் காரணமாக கடல் மட்ட அளவு பல மீட்டர் உயரும்.. அமேசான் காடுகள் அழிந்துவிடும். நிரந்தரப் பனிக்கட்டிகள் என வரையறுத்து வைத்திருக்கும் பனிக்கட்டிகள் தங்களது நிரந்தரத் தன்மையை இழந்துவிடும். எங்கோ யாருக்கோ ஆபத்துதானே என்று தமிழக மக்கள் நினைக்க வேண்டாம். நாசா வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில் இந்தியாவில் நீரில் மூழ்கும் அபாயத்தில் 12 நகரங்கள் உள்ளன. சென்னை, தூத்துக்குடி நகரங்களும் அந்தப் பட்டியலில் வருகின்றன என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்.

இதனால்தான் ஐபிசிசி அறிக்கை உலக சராசரி வெப்பநிலை 1.5 டிகிரிக்கு மேல் தாண்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என அழுத்தமாக வலியுறுத்துகிறது. வெப்பநிலை குறித்த உலக நாடுகளின் அடுத்த மாநாடு நடைபெற உள்ளது. உலக நாடுகள் ஒவ்வொன்றும் தன்னுடைய நலனை மட்டுமே குறுகிய நோக்கில் பார்த்து அரசியல் செய்யப் போகின்றனவா அல்லது உலகின் சுற்றுச்சூழல் அமைப்புகளையும் பூமியையும் அழிவிலிருந்து பாதுகாக்க கரம் கோர்க்கப் போகின்றனவா என்பது மிக விரைவில் தெரிந்துவிடும். ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com